கற்பக விநாயகன்

குப்பிழான்

1973

University of Jaffna
235.4
KUP
250262(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Jaffna
250262
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ

கற்பக விநாயகன்

UNIVERSITY OF JAFFNA
235.4
KUP
AP
LIBRARY

குப்பிழான் கற்கரைக் கற்பகவிநாயகர் ஆலய
புநராவர்த்தன கும்பாபிஷேக, சங்காபிஷேக மலர்

பரிதாபி வருடம் தை மாதம்

1973

K3
PB

University of Jaffna
250262
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ARCHIVES

265

2057

உ

காலத்தால் அழியாதது சைவமதம்.
மக்கள் பேணுவது சைவமதம்.
மேலும் ஓங்குவது சைவமதம்.
உலகத்தைக் காப்பது சைவமதம்.

சைவமதத்துக்காகத் தொண்டு செய்பவர்களுக்கு
நல்லாசிகளை வழங்குவது

நோர்த் சிலோன் ரேடிங் கொம்பனி லிமிட்டட்

5, மணிக்கூண்டு வீதி
யாழ்ப்பாணம்

தொலைபேசி : 587

போ(f)ர்ட் மோட்டார் வாகன உதிரிப்பாகங்களின்
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்.

மோட்டார் வாகனங்களை அழியாமற் பேணித்
திருத்தியும் கொடுப்பவர்கள்.

UNIVERSITY OF JAFFNA
235.4
KUP
AR
LIBRARY

★ உங்கள் இயந்திரங்களின்
★ உங்கள் புதிய வீடுகளின்

சகலவித
இரும்பு, உருக்கு, சினச்சட்டி
அலுமினியம், பித்தளை
ஆகிய வேலைகளைப்
பூர்த்திசெய்வதற்கு
நாணயம் மிக்க
ஒரேயொரு தொழிற்சாலை

★

ஸ்ரார் எலெக்றிக் வெல்டேஸ்
அன்ட்
ரேணிங் வேக்ஸ்

223, ஸ்ரான்லி வீதி
வெலிங்டன் சந்தி
யாழ்ப்பாணம்

டெலிபோன் : 7352

கலைவாணி நகை மாளிகை

★ அழகிய தங்க நகைகளுக்கு உத்தர வாதமுள்ள இடம்.

★ ஓடர் நகைகள் குறித்த காலத்தில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

78, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவநாகரீகமான றெடிமேட்
உடுப்புகளுக்கும் உயர்ந்தரக
புடைவைத் தினிசுகளுக்கும்
புகழ்பெற்ற ஸ்தாபனம்

டிசைன்
றெடிமேட் ஸ்ரோஸ்

B 27, பெரியகடை
யாழ்ப்பாணம்

கிளை ஸ்தாபனம் :

நியூ டிசைன்
ஜுவல்லர்ஸ்

68, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்

* நவீன வேலைப்பாடுள்ள
தங்கப்பவுண் நகைகள்

விரும்பிய டிசைன்களில்
உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ளலாம்

* ஓடர் நகைகள் குறித்த தவணை
யில் பெற்றுக்கொள்ளலாம்.

For

* Foreign & Local Liquor
* Provisions & Oilman Stores

M. M. T. P.
336, Hospital Road
JAFFNA

★

T'grams: "EMEMTIPI"
T'phone: 335

Space Donated
by

GRAND HOTEL
37, Beach Road
JAFFNA

T'phone: 544.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

கற்பக விநாயகன்

குப்பிழான் கற்கரைக்
கற்பக விநாயகராலய
புநராவர்த்தன
கும்பாபிஷேக, சங்காபிஷேக
மலர்.

REFERENCE
FOR PERMANENT USE IN THE LIBRARY

ஆசிரியர் : க. கணேசலிங்கம்

250262

250262

குப்பிழான்
5 - 2 - 1973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்ம சிந்தனை

நீ எதற்காக வருத்தப்படுகிறாய்? உனக்கு வேண்டியதையெல்லாம் எளிதில் அடையலாம். கழிந்ததை மறந்துவிடு. வருவனவெல்லாம் தெய்வத்தின் ஆதீனமென்று அதைப்பற்றிய கவலையை ஒழி. நீ கவனிக்கவேண்டிய காலம் நிகழ்காலமே. அதில் பக்தியும், நீதியும் கொண்ட வாழ்வை நடத்த முயல்வாயாக. பக்தி என்றால் உனக்கு நேர்ந்ததையெல்லாம் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொள்ளவேண்டும். தெய்வம் அமைத்த அமைப்பைச் சந்தோஷத்துடன் ஒப்புக்கொள்வதுதான் உண்மையான பக்தி. நீதியென்றால் உண்மையை மறைக்காமல் பேசவேண்டும். தருமம் தவறாமல் நடக்கவேண்டும். பிறர் ஒருவன் செய்த தவறு, அல்லது சொன்ன சொல், அல்லது நினைத்த எண்ணத்தைக் கருதி உன் செயல் வேறுபடக் கூடாது. உடலுக்கு என்ன நேர்ந்தாலும் உன் செயலும், எண்ணமும், பேச்சும் தர்மத்திலிருந்தும், உண்மையிலிருந்தும் தவறாமல் நிற்கவேண்டும். அப்போது உன் ஜன்மம் பயன்பெற்றதாகும். எந்தச் சம்பவத்தைக் கண்டும் திகைக்க மாட்டாய். புறப்பொருளின்மேல் உன் மனத்தை நிறுத்தமாட்டாய்.

— இராஜரிஷி மார்க்க அரேலியர்

தமிழில் : மூதறிஞர் ராஜாஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

விடயம்				பக்.
ஆசியுரை	...	...	...	8
எமது கருத்து (முன்னுரை)			...	9
கற்பகவிநாயகா!		...	...	13
அதுவேதான் இது!		...	...	14
விநாயகர் துதி		...	...	15
ஞானநாயகன்		...	...	16
ஆலயம்... இன்றுவரை		...	...	18
குருக்கள், கலைஞர் பற்றி		...	...	19
காணியும் இல்லை, கலியாணமும் இல்லை!			...	20
காணபத்யம் - வரலாறும் சிறப்பும்			...	23
கும்பாபிஷேக மகிமை		...	...	32
அருள்பொழியும் ஆனைமுகன்			...	35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியுரை

ஓம்

'ஓம்' என்பது பிரணவம். அது வேத மூலம்; உலக மூலமுமாம். அதன் இரகசியம் நமக்கு எட்டாதது. வேதம் சப்தப் பிரபஞ்சம்; உலகு அர்த்தப் பிரபஞ்சம். சப்த அர்த்தப் பிரபஞ்சங்களின் தொடர்பு தெரிந்து, சிருட்டித்தொழில் செய்பவர் பிரமா. அந்தப் பிரமாவுக்கே ஒருசமயம் பிரணவத்தின் பொருள் தெரியாமல் மயக்கம் உண்டானது. பிரணவத்தின் பொருளை விளுவிப் பிரமாவைப் பரீட்சித்த சுப்பிரமணியர், பிரமாவின் மயக்கம் தீரும்பொருட்டு, அவர் தலையில் நல்ல குட்டுக் குட்டிச் சிறைத்தண்டனையும் விதித்தார் என்று புராணம் கூறுகிறது.

சப்த அர்த்த மூலமான ஓங்காரம் விநாயகப்பெருமானுக்குத் திருவடிவம்.

''அகிலாண்ட கோடி யீன்றும் கன்னியென மறைபேசும் ஆனந்த ரூபமயில்'' ஆகிய பராசக்தி, ஆன்மாக்கள் உய்யும்பொருட்டுப் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தற்கு ஓம்பட்டு நிற்கும் முதல்நிலை ஓங்கார மூர்த்தியாகிய விநாயகக்கடவுள்; மூத்தபிள்ளையார். அவர் வடிவம் ஓங்காரம்.

பிரபஞ்ச விரிவு கயிற்றரவு போன்றது. கயிற்றரவு வெறுந் தோற்றமேயாயினும் கயிற்றைக் காணுவற்கு அது உபகாரமானது. 'இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு'. இந்தச் சரீரமும் ஒரு சிறு பூமியே.

தநுகரண புவன போகங்கள் முதலிய பிரபஞ்ச விரிவை, பிரபஞ்ச மூலமான ஓங்காரத்தை அறிதற்கும், ஓங்காரமூர்த்தியை வணங்கி, அப்பெருமானின் கருணைக்கு ஓம்பட்டு நிற்றற்கும் பயன்படுத்தல் வேண்டும்.

ஓம்படுத்தல் வேறு; ஓம்படுதல் வேறு. ஓம்படுதலே முத்திநெறி. ஓம்பட்டவர்களைப் பெருமான், 'எடுத்துச் சுமப்பான்'. அவர்களே 'சும்மா' இருப்பவர்கள்.

''கிரியை என மருவுமவை யாவும், ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்'' என்பது சிவப்பிரகாசம்.

கும்பாபிஷேகம் முதலிய ஆலயக் கிரியைகள் அனைத்தும், திருவருளுக்கு ஓம்படுதலாகிய முத்திநெறி சித்தித்தற்குரிய ஞானம் கிடைத்தற்கு நிமித்தமாம்.

இந்த முறையில், கற்கரைக் கற்பகவிநாயகராலய கும்பாபிஷேகமும், சங்காபிஷேகமும் ஞானம் கைகூடும் வகையில் எல்லா நலன்களையும் நல்குமாறு பிரார்த்திப்போமாக.

— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கருத்து

ஆசிரியர்

கீழ்த்திசை வெளுக்கின்றது!

காரிருள் கலைந்து கதிரவன் கவினொளி படர்கிறது. பறவைகள் இன்னிலை எழுப்புகின்றன. மொட்டவிழ்ந்து மலர்கள் மணம் வீசுகின்றன; எழில் கூட்டுகின்றன. உலகம் புத்தெழில் பெற்றுக் கண் விழிக்கின்றது.

காலையின் மலர்ச்சியிற்றான் எத்தனை அழகு! எத்தனை இன்பம்!

இந்த அழகும் இன்பமும் இன்னும் சிறிதுநேரத்தில் கலைந்துவிடும். நாம் காணும் அனைத்துமே இந்த நியதிக்கு, மாறுபாட்டிற்கு உட்பட்டன. வாழ்வின் ஒவ்வொரு கூறும் நிலையற்றது; மாறுபடுவது; மடிவது. மனிதன் காணும் புறவுலகின் நியதி இது.

ஆயினும் இந்த மாறுபாட்டிற்கும் நிலையற்ற தன்மைக்கும் ஊடாக நிலையுள்ள மாறுபடாத அமைதிப் பண்பொன்றை அவன் உணரத் தவறியதில்லை. அந்தப் பண்பைப் போற்றி, அதில் ஒன்றி, நிலையான மாறுபடாத நிறைஅமைதியில் நின்றிருக்கின்றான். அழிகின்ற, மாறுபடுகின்ற உலகில் உலவிக்கொண்டே அழிவற்ற மாறுபடாத அந்தமில் இன்பத்தை அமைதி நிறைந்த தன் ஓய்வுநேரத்திலெல்லாம் அவன் அடையத் தவறியதில்லை.

இந்த இன்பத்தின் ஊற்று அழியாத அக அமைதியே. புற உலகில் அவன் அடையும் இன்பத்தின் அளவும் இந்த அக அமைதியினளவேயாகும். ஆயினும் புறஉலகில் அடையும் இன்பம் மாறுபடும் தன்மையதே. அகத்தின் நிறைஅமைதியில் நின்ற அறிஞரின் வாழ்வு நிறைவுபெற்றது. நிலையான பேரின்பத்தில் அவர்கள் திளைத்தனர்.

புறஉலகின் இன்ப ஒளியும் துன்ப நிழலும் இந்த அறிஞரின் அகத்திற் படர்ந்தாலும் அதில் படிவதில்லை. அகத்தின் நிறை அமைதியையும் அமைதி தோய்ந்த அந்தமில் இன்பத்தையும் வாழ்வின் புறக்கூறுகள் தீண்டுவதில்லை. காலவரையறையற்ற, இடவரையறையற்ற, இன்பதுன்பமற்ற நிறையமைதியில் நின்று நிலைபெறும் அமைதியின்பம் துய்த்தனர் இச் சான்றோர். அனைத்தையுங் கடந்து நின்ற பண்பொன்றை — கடவுளைக் கண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள்வழி நின்று அதை உணர்ந்த மக்கள் அவர்கள் கண்ட வழியிலே பட்டனர் - வழிபட்டனர். 'வழிபாடு' என்ற தமிழ்ச்சொல் உணர்த்துவது இதுவே.

முன்னோர்கள், குறிப்பாகத் தென்னாட்டவர் வாழ்வின் நற்கூறுகள் ஒவ்வொன்றும் நிறைவெய்திப் பூரணமடைந்த, அதன் முடிவாகிய ஒன்றை வேண்டினர்; போற்றினர். அன்பின் பிழம்பாக, அறிவின் நிறைவாக, அழகின் எழிலாக, இன்னோரன்ன பிற நற்பண்புக் கூறுகளின் நிறைபொருளாக ஒவ்வோர் கடவுளைக் கண்டனர். சிவனென்றும், கலை மகளென்றும், முருகனென்றும் இன்னும் பற்பல பெயரால் இறைவனை ஏற்றினர். இந்த வழியில் தோன்றிய சமயங்கள் பல. கால தேச வர்த்தமான வேறுபாட்டாற் சமயங்கள் வேறுபடினும் அவையெல்லாம் 'முடிவில் மோன வாரிதியில் நதித்திரள்போல்' ஒரு கடலையே - பரப்பிரமத்தையே - சென்றடைகின்றன. இதனையறியாது மதவாதமென்னும் மாயச்சந்தை இரைச்சலில் மனிதகுலம் மதமுணர்த்தும் மெய்மையை உணராது மயங்குகிறது; மடிகிறது.

சமயங்களின் நோக்கம், மனிதமனத்து விலங்கியல்பைக் கீழ்ப்படுத்தி, அடக்கி, நற்பண்புக் கூறுகளை வளர்த்து, மனிதனை மேம்பட்ட தெய்வீக நிலைக்கு உயர்த்துவதே. அவா, வெகுளி, பொறுமை முதலிய கீழ்த்தரமான தன்னலக் கூறுகளை அகற்றி அன்பு, தயை முதலிய நற்பண்புகளை வளர்த்தால் மனிதன் அமைதியின் தலைவனை இறைவனை அடையலாம். ~~இந்த வழியில் நின்று இறைவனை அடையலாம்~~. இந்த வழியில் நின்று இறைவனை அடைந்தவர்கள் இயேசு, புத்தர், மகாத்மா முதலிய பெருமக்களும் நாயன்மார் போன்ற அடியார்களுமாவர்.

இன்றைய உலகில் புதுமை நாட்டமும், இன்ப நுகர்ச்சியும், ஆரவாரமுமே வாழ்வின் நோக்காக இருக்கின்றன. இவற்றுள் உலகமக்கள் தன்னிலை மறந்து களிக்கின்றனர்; அல்லது கலங்குகின்றனர். ஆழ்ந்த அமைதியையும், எதற்கும் கலங்காத உள்ளத்துரனையும் இவர்களிடம் காண்பதரிது. அகநிலை ஆற்றல்பெற்ற மக்கள் மிகமிகக் குறைவெனலாம். ஆலயம் செல்வதும் வணங்குவதும் சூழலையும் உலகியல்பையும் தழுவிய ஒன்றுகவே பலரிடம் திகழ்கிறது. உள்ளத்து நற்பண்புகளை வளர்த்து இயற்கையளாவிய அன்புக் கடவுளை இவர்களால் உணர முடிவதில்லை. வாழ்வின் நற்படிகளிற் காலெடுத்து வைக்காமலேயே அப் படிகள் சென்றடையும் தெய்வீக மணிமுடியைத் தொட முனைகின்றனர். சிலர் தொட்டுவிட்டதாக ஒரு மாயத் தோற்றத்தினை மனதில் வளர்த்துப் பித்தலாட்டமாடுகின்றனர்.

உலகிற்கு உழைக்கவந்த உத்தமர் சிலர் உயர் தெய்வீகப்பண்பு பெற்றுத் திகழ்கின்றனர். இவர்களை உலக மக்கள் தெய்வங்களாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றுகின்றனர். இதில் தவறில்லையாயினும் இவர்கள் சிலநேரங்களிற் செய்யும் சித்துக்களிலும் அற்புதங்களிலும் மயங்கி, தெய்வம் என்றால் செப்படிவித்தை செய்யும் ஒரு மாயச் சக்தியென்று மனத்திலெண்ணித் தெய்வத்தின் சிறப்பையும் அருமையையும் பெருமையையுங் கீழ்ப்படுத்தித் தாமுங் கீழான நிலையிலேயே நிலைத்துநிற்கின்றனர். இயற்கையில் எந்த நிகழ்ச்சியும் காரணகாரியமின்றித் திடீரென ஏற்படுவதில்லை. இதை உணராது தம் வாழ்வின் துயர்களுக்கெல்லாம் மாயமருந்து தேடிச் சித்துக்களை நாடும் மக்களால் தம் இன்னல்களை எவ்வாறு எதிர்நோக்கி வெல்லமுடியும்? மகான்கள் சிலர் சித்துக்கள், அற்புதங்கள் செய்யக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவற்றால் மக்களுக்குதவி அவர்களை நன் னெறிப்படுத்த முனைகிறார்கள். அது அவர்களின் இயல்பு. ஒருவிதத்திற் பார்த்தால் இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. பெரியோரை வியத்தலும் சிறியோரை இகழ்தலும் அகநிலை ஆற்றல் பெற்றவருக்கு முடியாததொன்று.

....."மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை யிகழ்த லதனிலு மிலமே."

என்பது தமிழன் என்றோ அறிந்து உணர்ந்து உலகிற்கு உரைத்த உரை. அற்புதங்களில் மயங்காமல் நம் அகஆற்றலை வளர்த்து இறையருள் பெறுவோமாக.

சமயவழியில் முறையாகச் செல்பவன் அகத்தின் விலங்கியல்பை அகற்றி அன்பு, இரக்கம் முதலிய நற்பண்புக் கூறுகளை வளர்க்கிறான். புறஉலகிற் செயல் புரியும்போதும் அதன் நிலையற்ற தன்மையும் மாறுபாடும் அவன் அகத்தின் அமைதியையும் இன்பத்தையும் அழிக்க முடியாதனவாகின்றன. மேற்பரப்பில் இடையறாது அலைகள் மோதிச் சிதறியபோதும் கடலின் அடித்தளம் அமைதியுடன் இருப்பதுபோல் அவன் அகத்திற் பேரமைதியும் அமைதி தோய்ந்த இன்பமும் நிலைக் கின்றன. ''அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த சொரூபி'' யான இறைவனின் அருளொளி அவன் உள்ளத்திற் படர்கிறது. 'தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி', 'அவனருளாலே அவன் தாழ் வணங்கி' ஆனந்தமான தெய்வீக நிலைக்கு உயர்கிறான். மனிதனின் விலங்கியல்பை அகற்றி நற்பண்புகளை வளர்த்து அவனை மனித ஆற்றல் கடந்த உயர் மனிதனாகவும் தெய்வீகப் பண்பு நிறைந்தவனாகவும் மாற்று வதற்கு இடையறாத தெய்வ பக்தியும், தெய்வம் தொழத் திருக்கோவில் களும் தேவைப்படுகின்றன.

யாழ்ப்பாணத்துக் குப்பிழான் ஊரில் கற்கரை என்னும் பகுதியில் ஓர் ஆலயம் உண்டு. சொற்பதம் கடந்த தூயோன் கற்பக விநாயகனாக இங்கே காட்சியளிக்கிறான். அண்டியவர் வினை அறுக்கும் விநாயகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன். அவன் உறையும் ஆலயம் சில காலங்களுக்குமுன் பழுதுற்று முடிசரிந்த நிலையிற் காணப்பட்டது. அவனின் திருவருளால் இன்று இந்த ஆலயம் பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் புனருத்தாரணம் செய்யப்பட்டுக் கும்பாபிஷேகமும் சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளன. இந்தத் திருப்பணிக்கு உதவிய பெருமக்கள் பலர். அந்தப் பெருமக்களே யும், ஆலயத் திருப்பணி இனிது நிறைவுற அயராது உழைத்த அர்ச்சகர் சிவஸ்ரீ குமாரராசாக் குருக்களையும், ஆலய பரிபாலன சபையையும், திருப் பணிச் சபையையும் குப்பிழான் மக்களும் சைவத் தொண்டர்களும் என்றும் மனத்தில் வைத்திருப்பார்கள்.

கோவிற் திருப்பணிகள் நன்கு நிறைவெய்திக் கும்பாபிஷேகமும் சங்காபிஷேகமும் நடைபெறும் நல்ல நிகழ்ச்சிகளே நினைவுகூருமுகமாக, ''கற்பக விநாயகன்'' என்னும் இச் சிறுமலரைத் தொகுத்து வெளியிடு கிறேன். சைவ உலகம் இதனை ஏற்றுப் பயனடையுமென எண்ணுகிறேன்.

சில மாதங்களுக்குமுன் ஆங்கிலேய அன்பர் ஒருவர் நம் திருக் கோயில்களையும் அவற்றின் அமைப்பையும் தத்துவங்களையும் அறிவதற் காக என்னை அணுகினர். யாழ்ப்பாணத்துக் கோயில்கள் சிலவற்றிற்கு அவரை அழைத்துச்சென்று அறிவுக்கெட்டியவற்றை அவருக்கு விளக்கி னேன். எம் மதத்தில் பொதிந்த தத்துவங்கள் அவர் விளங்கி அறிந்த அளவிற்கு எம்மவர்களுக்கு அவற்றை அறியும் ஆர்வம் சிறிதுமில்லை என்பதையும் கண்மூடித்தனமான குருட்டு நம்பிக்கைகளில் மூழ்கி உண்மைச் சமயத்தை அறியாமல் வாழ்கிறார்களென்பதையும் அறிய வருத்தமாக இருக்கிறது. அன்றுடம் நாம் சென்று வணங்கும் ஆலயத் தின் அமைப்பும் அவை விளக்கும் உண்மைகளும் தெய்வ விளக்கங்களும் சமய அனுட்டானங்களின் நோக்கங்களும் அறியாத வாழ்வு சமய வாழ்வாகுமா? இந்த மலரில் உள்ள கட்டுரைகள் ஓரளவுக்கு வாசிப்பவர் களுக்குச் சமய அறிவை ஊட்டும் என்றே எண்ணுகின்றேன். ஞான நாயகனை பிள்ளையார் நமக்கு அறிவும் பண்பும் அருள்வானாக.

பகல் என்றால் அதற்கு மாறாக இரவு இருக்கிறது. வெய்யில் என்றால் மழை இருக்கிறது. ஜடம் என்றால் சித்து இருக்கிறது. இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒரு மாற்றுப்பொருள் உண்டு. இது இயற்கை விதி. இதிலிருந்தே, 'அழுக்கு மயமான ஜீவாத்மாவுக்கு மாற்றாக ஒரு பரிசுத்தப் பொருள் இருக்கவேண்டும்; துக்கமயமான ஜீவாத்மாவுக்கு மாற்றாக ஓர் ஆனந்த வஸ்து இருக்கவேண்டும்; காமக் குரோதங் களால் ஓயாமற் சலனமுறும் ஜீவாத்மாவுக்கு மாற்றாகச் சித்தத்தில் கொஞ்சங்கூட அசைவில்லாத ஒன்று இருக்கவேண்டும்' என்பது உன்னிப் பார்த்தால் விளங்கும். அந்தப் பொருளைத்தான் பரமாத்மா என்கிறோம். அதனிடம் நாம் பக்தி செய்வது அதுவாகவே ஆகவேண்டும் என்பதற்குத்தான்.

— ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பக விநாயகா!

வானுற வளர்ந்த மாமலை யமர்ந்த
வண்தமிழ் வாழ்த்திடும் அரனைத்
தேனுறு கனியை வாங்கிட வலமாய்த்
திரிந்தபொற் பாதங்க ளிரண்டும்
வானினிற் றெரியும் மீனினம் மிளிர
வளர்ந்திடு மண்டத்தை யடக்கித்
தான்பெரி தாகத் தோன்றிடு வயிறும்
தகவுடன் வயிற்றினைச் சுற்றி,

*

ஆரமாய் அமைந்து அனைத்தையும் தாங்கும்
அருள்வலி யெனமிளிர் அரவும்
தாரமாய் வனத்து வள்ளியைப் புணரத்
தமிழிறை முருகனுக் குதவி
நேரெதிர் வந்த வாரண முகமும்
நீள்புரி யிலங்கிடு மார்பும்
பாரதம் எழுதிப் பாரினுக் குணர்த்தப்
பண்டொடித் திட்டவோர் எயிறும்,

*

கொண்டெழுந் தருளிக் குறைகளைக் களைந்து
குப்பிழான் ஊரில்கற் கரையில்
கண்டவர் உள்ளம் கனிந்திடச் செய்யும்
கற்பக விநாயகா! வாழ்வில்
அண்டிய வினைகள் அறுத்திடும் அரசே!
ஐங்கரா அன்புடன் ஏற்றும்
தொண்டர்கள் உள்ளம் தோன்றுமெய்ப் பொருளே!
தூமலர்க் கழலிணை போற்றி!

—"முதல்வன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவேதான் இது!

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சிகாமகோடி சங்கராசாரியசுவாமிகள்

'வசதியாக வாழ்ந்தால் போதாதோ? வேதாந்தம் எதற்கு?' என்று சொல்பவ ருண்டு. வேதாந்தம் இல்லாமல் கிடைக்கிற 'வசதி'தான் என்ன?

ஒரு கோயிலுக்கு யானை வாகனம் செய்தான் ஒரு மரத் தச்சன். அதைப் பரீட்சிப்பதற்காக இன்னொரு தச்சன் போனான். அவனோடு அவனுடைய குழந் தையும் போயிற்று. மர யானையைப் பார்த்ததும் குழந்தை பயந்தது. அதைப் பரீட்சிப்பதற்காக அதன் அப்பாவான தச் தன் நெருங்கியபோது குழந்தை, "அப்பா; யானைகிட்டே போகாதே; அது முட்டும்" என்று கத்தியது. தச்சன் குழந்தையிடம் "இது மரப் பொம்மைதான்; முட்டாது" என்று சொல்லிச் சமாதானம் செய்து அதையும் யானைக்குப் பக்கத்தில் அழைத் துப் போனான்.

குழந்தைக்கு இந்த ஞானம் வருமுன் என்ன நடந்தது? அந்த வாகனம் அதற்கு யானையாகவே இருந்தது. அது மரம் என் கிற ஞானத்தைக் குழந்தையிடமிருந்து மறைத்தது, அது யானையாக்கும் என்கிற நினைப்பு. அது தத்ரூபம் யானை மாதிரி இருந்தால்கூடத் தச்சன் பயப்படாததற் குக் காரணம், அதன் யானைத் தன்மை அவனைப் பொறுத்தமட்டில் மறைந்து அது மரம்தான் என்கிற அறிவு இருந்தது தான்.

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை"

என்று இந்த இருவர் நிலையையும் திருமூ லர் திருமந்திரத்தில் சொல்லியிருக்கிறார்.

திருமூலர் பெரிய யோகீசுவரர். பெரிய தத்துவங்களை லகுவாகச் சொல்லி விடுவார் அவர். அவரது திருமந்திரத்தில் தான் மேலே சொன்ன வாக்கு இருக்கி றது. திருமூலர் எதற்கு இந்தக் கதை யைச் சொன்னார்? செய்யுளின் அடுத்த இரண்டு வரிகளைப் பார்த்தால் அது புரி யும்.

"பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்"

யானை வேறு. மரம் வேறு இல்லை என்பதுபோல் பரமாத்மா வேறு; உலகம் வேறு இல்லை என்று இப்படித் திருஷ்டாந் தம் காட்டி விளக்குகிறார் திருமூலர். பர மாத்மா என்கிற மரத்திலேயே ஆனது தான் இந்தப் பார் முதலிய பிரபஞ்சம் என்கிற பொம்மை. குழந்தைக்குப் பொம் மையில் மரம் தெரியாததுபோல் நமக்கு உலகத்தில் பரம் தெரிவதில்லை. நம் பார்வையில் பார்முதற் பூதங்கள் பரத்தை மறைத்துவிட்டன. ஞானிகளுக்கோ எல் லாம் பிரம்ம மயமாகவே தெரிகிறது. அவர்கள் விஷயத்தில் பார்முதற் பூதங் கள் பரத்தில் மறைந்துபோய் விடுகின் றன.

அது சரி, இந்தக் கதை எல்லாம் என் னத்துக்கு என்று கேட்கலாம். நமக்கு வேண்டியது லோகத்தில் வசதியான வாழ்க்கை; அதற்குத் தேவை பணம், காசு தான். பரத்தைப் பற்றியும் பாரைப் பற்றி யும் நமக்கென்ன கவலை என்று கேட்கலாம்.

சரி, எல்லாரும் பணக்காரராகி விடுவ தாகவே வைத்துக்கொள்வோம். நிம்மதி யாக, சாந்தமாக, நிர்ப்பயமாக இருக்க அது உதவுமா? பணக்காரர்கள் நிறைந்த தேசங்களைப் பாருங்கள். அங்கே எத்தனை சச்சரவு; நிம்மதியின்மை. எல்லாருக் கும் நிறையப் பணம் வந்துவிட்டாலும், ஒவ்வொருவனுக்கும் மற்றவனைவிட அதி கம் இருக்கவேண்டும் என்கிற ஆசையும், அதனால் போட்டியும், சச்சரவும் இருந்து கொண்டேதான் இருக்கும். நமக்கு வேண் டிய சௌகரியம் இருந்தால் மட்டும் போ தாது; இன்னொருத்தனை விட அதிகமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவேண்டும் என்ற போட்டி மனப் பான்மையே மனித சுபாவம். போட்டி இருக்கிறவரையில் மன நிறைவு யாருக் கும் உண்டாகாது. 'வசதி' உண்டாவ தால் இந்தப் போட்டி குறையாது.

நிறைந்து வாழவேண்டுமானால் ஆத்ம சாந்தி வேண்டும். ஆத்ம சாந்திக்கு மேலே சொன்ன ஞானம் வந்தேயாகவேண்டும். எப்போதும் சாசுவதமாக நடக்கவேண் டிய காரியம் ஆத்ம விசாரம்தான். உல கத் துன்பங்களை விலக்கு வாங்கிக் கொள் ளாமலிருக்கவேண்டுமானால், இந்த உலகம் என்பது நாம் நினைக்கிறபடியில்லை; இதுவே சிவமயமானது; அது வேறு - இது வேறு அல்ல. மரமே யானை; பாரே பரம் என்ற நினைப்பு இருந்துகொண்டே இருக்கவேண் டும். இந்த ஞானம் இல்லாவிட்டால் எத்தனை பொருளாதார முன்னேற்றம் வந்தாலும் லோகம் இருட்டில் அகப்பட் டுக்கொண்டதாகவே அர்த்தம். சூரியன் போனால்கூடப் பாதகமில்லை. ஞான ஒளி நம்மை விட்டு என்றும் போகவிடக் கூடாது.

[இது கல்கி 19-12-72ஆந் திகதி இதழிலிருந்து எடுக்கப்பட்டது]

விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

— திருமந்திரம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

— மூதுரை

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

— கந்தபுராணம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கலந்து.

— கபிலதேவநாயனார்; 11ஆம் திருமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானநாயகன்

(நா. முத்தையா, "ஆத்மஜோதி" ஆசிரியர்)

இந்துக்கள் எக்கருமத்தைத் தொடங்கினாலும், தம்மை நினைப்போரின் விக்கினங்களை நீக்குபவராகிய விக்னேசுவரப் பெருமானை நினைந்தே தொடங்குவர். கடிதம் எழுதும்போது பிள்ளையார்சுழி இட்டு அதன்கீழ்ச் சிவமயம் என்று போடுவதைப் பார்க்கின்றோம். தான் தொடங்குங் கருமம் விக்கினமின்றி முடிவதோடு உலகம் முழுவதையுமே சிவமாகப் பார்க்கும் பரந்த மனப்பான்மையும் ஏற்படுகிறது.

நாரதர் கொடுத்த கனியைப் பெற விரும்பிய முருகன் உலகத்தைச் சுற்றி உலகம் முழுவதிலும் அம்மையையும் அப்பனையுங் கண்டார். விநாயகப்பெருமானே அம்மைக்குள்ளும் அப்பனுக்குள்ளும் உலகம் முழுவதையுங் கண்டார். ஆகவே விநாயகர் ஞானநாயகன் ஆகின்றார்.

தம்மை அன்போடு பூஜித்த நம்பி ஆண்டார்நம்பிக்குப் பொல்லாப்பிள்ளையார் கல்வி அறிவை ஊட்டியதோடு, இராஜராஜசோழனுடைய கேள்விப்படி மூவர் தேவாரப்பதிக ஏடுகள் சிதம்பரம் திருக்கோயிலிற் கிடைக்கவும் செய்தார். மறைந்துபோயிருந்த எமது திருமுறைச் செல்வங்களை அளித்த பெருமை பொல்லாப்பிள்ளையாருக்கே உரியதாகும். இதனாலும் விநாயகப்பெருமான் ஞானநாயகன் ஆகின்றார்.

சேரமான்பெருமாள் நாயனாரும் ஔவையாரும் நெருங்கிய நண்பர்கள். சேரமான் சுந்தரருடன் கைலாசத்துக்குச் செல்லப் புறப்படும்போது தமது நெருங்கிய தோழியரான ஔவையாரை அழைக்காமல் வந்துவிட்டோமே என வருந்தினர்.

இது விநாயகரைப் பூஜைசெய்து கொண்டிருந்த ஔவையாருக்குத் தெரிந்தது. தாமும் அவர்களோடு போகவேண்டும் என்று அவசரமாகப் பூஜை செய்யத் தொடங்கினர். விநாயகப்பெருமான், "ஔவையே! ஏன் அவசரம்? நிதானமாகச் செய்துமுடி. அவர்களுக்கு முன்பு உன்னைக் கொண்டுபோய் நான் சேர்க்கிறேன்" என்றாராம். ஔவையார் உடனே,

"சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசைப் பாட"

என்று தொடங்கி

"கூடுமெய்த் தோண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தி னரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே."

என்று விநாயகர் அகவல் பாடிப் பரவிப் பணிந்தார். விநாயகப் பெருமான் தமது துதிக்கையால் ஔவையாரை எடுத்துக் கைலாயத்தில் கொண்டுபோய் விட்டாராம். வெகுநேரம் கழித்தே சுந்தரரும் சேரமானும் வந்தபோது அங்கே ஔவையார் இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தனராம்.

கணபதி பிரணவம் என்ற ஓங்கார வடிவினர். அவருடைய துதிக்கை அந்த ஓங்காரத்தையே குறிக்கும். கணபதி என்னும் பதத்திலுள்ள 'க' என்பது மனோவாக்குக்கள். "ண" என்பது அவற்றைக் கடந்த நிலை. அவ்விரண்டுக்கும் ஈசன் கணேசன். 'க' என்பது அறிவு; 'ண' என்பது வீடு என்று பொருள் கொண்டு அறிவுக்கும் வீட்டுக்கும் தெய்வம் என்றும் கூறுவர். இதனாலும் ஞானநாயகன் ஆகின்றார்.

பிரபஞ்சம் முழுவதும் கணபதியின் உடல் ஆகிறது. அதனிடத்து வலிவும், உறுதியும், தூய்மையும், அறிவும் பொலிவதைக் காணலாம். இதனால்தான் ஔவையார் விநாயகப்பெருமானின் திருஉரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத் துப்பார் திருமேனி என்றார். பூவைக் கையிலே கொண்டு துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதங்களைப் பூசிப்பவர் களுக்கு நல்ல வாக்குச்சித்தியும் நல்ல மன அமைதியும் திருமகள் கடாட்சமும் உண் டாகும் என்கின்றார். இதனாலும் ஞான நாயகன் ஆகின்றார்.

ஞானமே வடிவெடுத்தவர் கணபதி. இயற்கை என்னும் உடலில் ஒழுங்குப் பாடும் நல்லறிவும் திகழ்வதே இதற்குச் சான்று ஆகும். அண்டங்கள் யாவும் அவ னது பேழை வயிற்றுள் அடக்கம். சக்தி யின் சின்னமாகிய சர்ப்பத்தை அரைக் கச்சாக அணிந்துள்ளான். சர்ப்பம் குண்ட லினி சக்தியின் வெளிப்பாட்டுக்கு அடை யாளம். குண்டலினி சக்தியின் வெளிப் பாடு ஞானத்திற்கு அடையாளம்.

கணபதியின் திருக்கரங்களில் தந்த மும் ஜபமாலையும் இருக்கின்றன. கையில் வைத்திருக்கும் தந்தம், கல்வி பயில்வதற்கு அறிகுறியான எழுதுகோலாகிறது. ஜப மாலை, சிந்தனைசக்தியை வளர்ப்பது அவசி யம் என்பதை நினைவூட்டுகிறது. அறிவை வளர்க்க விரும்புபவர் யானைமுகனை ஆரா திக்கவேண்டும். இதனாலும் ஞானநாய கன் ஆகின்றார்.

கணபதி ஐந்தாவது கரமாகிய தும் பிக்கையில் தனக்கு மிகவும் விருப்பமான மோதகம் என்னும் தின்பண்டத்தை வைத்திருக்கிறார். உணவு இல்லாது யாரும் உயிர் வாழமுடியாது. விநாயகப் பெரு மானிடம் ஔவையார் சங்கத்தமிழ் மூன் றையும் பெற விரும்பினார். பாலும், தெளிதேனும், பாகும், பருப்புமாகியவற் றைக் கொடுத்து வேண்டுதல் செய்கின் றார். அம்மையைப்போன்றும் அப்பனைப் போன்றும் கணேசர் முக்கண்ணராயிருக் கிறார். சாதாரணமாய்த் தென்படும் இரண்டு கண்களும் புறஉலகைக் காண்ப தற்கு அமைந்தவைகள். நெற்றியில் உள்ள மூன்றாவது கண் பரஞானதைச் சுட்டிக் காட்டுகிறது. இகம், பரம் ஆகிய இரண் டையும் உள்ளபடி அறிதலே நல்லறிவு. ஞானக்களஞ்சியமாகிய விநாயகரிடத்து இத்தகைய நிறைஞானம் பொலிந்து கொண்டிருக்கிறது.

இவ்வளவு தத்துவ இரகசியங்கள் அடங்கிய மூர்த்தியைத் திருமூலர் 'ஞானக் கொழுந்து' என்று அழைக்கின்றார்.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

நற்சிந்தனை

தெய்வத்தை நம்பு. முழுமனத்தோடு நம்பு. உலகில் உனக்கினியது எனத் தோன்றும் எவற்றிலும் இனியதாக நினை. அதைவிட வேறில்லை என்று நினை. இருக்கும்போதும், நிற்கும்போதும், நடக்கும்போதும், கிடக் கும்போதும் நினை. உனது நரம்பிலும் தசையிலும் இரத்தத்திலும் தெய்வமென்னும் நினைவே நிறைவதாக. நானில்லை, கடவுளே இருக்கிறார் என எண்ணு. கடவுளைக் கும்பிடுதலே வாழ்வின் இலக்காக வைத்துக் கொள். எவன் எதை நினைக்கிறானோ அவன் அதுவாகிறான். கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப்பாயாக. எல்லாம் அவருடைய செயலாகுக. ஈற்றில் எல்லாம் அவனுகவே காணப்படும்.

— யோகர்சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம் ..... இன்றுவரை

செ. கதிரவேலு, தலைமை ஆசிரியர்

"கற்கரைக் கற்பக விநாயக னடிதொழ
அற்புத மானநல் வாழ்வது வருமே."

விநாயகப் பெருமான் துணை கொண்டு, இந்த ஆலயம் தோன்றிய வரலாற்றினை ஓரளவு ஆராய்ந்து அறிந்து எழுதுவதற்கு விரும்பினேன். ஆனால் வரலாற்றினை நன்கறிந்த கற்றோரும் மற்றோரும் மறைந்துவிட்ட காரணத்தினாலே சரியாக அறியமுடியாவிட்டாலும், எம்பெருமான் அற்புதத்தை அடிக்கடி பலரும் பேசிக்கொள்ளுவதால் கற்கரைக் கற்பக விநாயகன் 'அருள்கொண்ட அண்ணலே' என்பதைத் துணிந்து கொண்டதோடு, அவர் மூர்த்தியாக அமைந்த கதையை முதியவர் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

சில நூற்றாண்டுகளுக்கு முன் தொடங்கி இற்றைக்குச் சில ஆண்டுகள் வரை எம்மூரவர் சிலர் மன்னார் (முன்பு மாதோட்டம்) வியாபாரிகளாக இருந்தனர். மாதோட்டம் என்னும் பெயர் சரித்திரகாலப் பெயராகவும், நாயன்மார் வாய்ச்சொல்லாகவும் வந்திருப்பதைக் கற்றோர் அறிவர். எம்மூரவர் 'மாதோட்டம் செல்லுகிறோம்' என்று கூறுவதை இன்றும் கேட்கலாம். வீதிகள், வாகனங்கள் இன்றிப் பிரயாண வசதியற்ற அக்காலத்தில் இங்கிருந்து கால்நடையாகக் கொழும்புத்துறை சென்று, அங்கே தோணி ஏறிப் பூநகரித்துறையிலே இறங்குவார்கள். அங்கிருந்து செம்பன்குண்டு, பல்லவராயன்கட்டு, முழங்காவில், வெள்ளாங்குளம், இலுப்பைக்கடவை, ஆத்திமூட்டை, பாப்பாமூட்டை வழியாக மாந்தை சென்று வியாபாரம் செய்து கால்நடையாகவே மீள்வர். அக்காலத்தில் சங்ககாலத்தில் கூறப்பட்ட ஆறலைகள்வர் கூட்டம் கூட்டமாக நாடுகளுக்குள் மறைந்து வழிப்பறி செய்து வாழ்ந்தனர்.

எம்மூர்ப் பெரியார் அடுகாஞ்சி, படுகாஞ்சி என்ற இரு சகோதரர் நடைப்பயணம் செய்தபோது வழிப்பறி செய்வோர் அவர்களை மறித்துத் தலைச்சுமையாகக் கொண்டுசெல்பவற்றைப் பறித்துத் துன்புறுத்தினர். சோதரர் இருவரும், தாமும் அவருடன் சேரவந்ததாகக் கூறித் தம் பொருட்களைக் காப்பாற்ற முனைந்தனர். அவர்களுடன் சேர்ந்து அவர்களுக்கு உணவு சமைத்தும் காவல்செய்தும் சில மாதங்களைக் கழித்தனர். ஒருநாள் இரவு கொள்ளைப் பொருட்களை அள்ளிக் கொண்டு இருவரும் அவர்களிடமிருந்து தப்பி ஓட்டமும் நடையுமாக வந்து ஊரை அடைந்தனர். கொள்ளைப் பொருள் குடும்பத்திற்குதவாது என்றெண்ணி, அதனை ஆலயம் அமைக்கப் பயன்படுத்தத் தீர்மானித்தனர். இது போது ஆலயம் அமைந்த இடத்திலே தலையிற் கொண்டுவந்த பொருட்களை இறக்கிவைத்துக் களைப்பாறினர். அச்சமயம் கொள்ளைக்கூட்டத் தலைவன் குதிரையில் வந்து அவர்களைக் கைதுசெய்து கொள்ளைப் பொருட்களைத் தூக்க முயன்றான். கலக்கமடைந்த சகோதரர் விநாயகப்பெருமானை வேண்டினர். கொள்ளைப் பொருட்கள் தூக்கமுடியாதனவாகிக் கல்லாகத் தோற்றமளித்தன. கொள்ளைத் தலைவன் மனம் மாறி அந்த இடத்திலே ஆலயவழிபாடு செய்து தன் இழிதொழிலையும் விட்டான். இந்தத் திவ்விய இடமே இன்றைய ஆலயத்தின் இருப்பிடமாகும்.

கொள்ளைத் தலைவன் கும்பிட்ட கோயில் கொட்டிலாக இருந்து பக்தர்கள் பலரைத் தன்னிடம் ஈர்த்தது. நாளடைவில் வளர்ச்சியடைந்து பிரம்மஸ்ரீ பொன்னையாக் குருக்கள் பரம்பரையினரை அர்ச்சகராகக் கொண்டு வளர்ந்தது. அவர் காலத்தில் அவரின் மருமகன் செல்லையாக் குருக்கள் (காலஞ்சென்ற வைத்தீஸ்வர வித்தியார்சாலை ஆசிரியர் சுந்தரசர்மாவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்துனர்) எடுத்த பிரயாசையால் காலஞ்சென்ற வ. வைத்திலிங்கத்தின் தந்தை ஆ. வல்லிபுரமும் ஊரவர்களும் சேர்ந்து மண்டபம் அமைத்துக் கும்பாபிஷேகம் செய்வித்தனர்.

திரு. வ. வைத்திலிங்கத்தின் அயராஉழைப்பினாலும் அவருக்குத் துணையாக நின்று தொண்டாற்றிய திரு. ந. கந்தையா, தலைமை ஆசிரியர், திரு. த. ஐயாத்துரை, திரு. வ. பண்டிதர் ஆகியோரின் பெருமுயற்சியாலும் ஆலய பரிபாலன சபை உருவாகி ஆலயவளர்ச்சிக்கு இன்றுவரை அரும்பணிகள் புரிகின்றது. திரு. வைத்திலிங்கம் தம் பொருளை ஆயிரக்கணக்கில் அளித்து ஆலயந் திருத்தி 1957ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் செய்வித்தார். திரு. ந. கந்தையா தமது அரும்பொருள் ஈந்ததுடன் மக்களின் பணத்தையும் சேர்த்து மண்டபம் திருத்தி மகா சங்காபிஷேகம் முற்றுவித்தார். இவர்களின் பணிகளைத் தொடர்ந்து இவர்கள் குடும்பத்தினர் செய்கின்றனர். திரு. த. ஐயாத்துரை, கடலோடி மலாயா சென்று பணம் சேர்த்து ஆனைமுகனின் அழகிய உருவமொன்றை அளித்ததுடன் எழுந்தருளி வீதிவரச் சகடை உருளியும் தம்பொருளால் உதவினர். திரு. வ. பண்டிதர் பலவகையிலும் பக்கத்துணையாக இருந்தவர். இவர்களுடன் இன்னும் பலர் ஆலய வளர்ச்சிக்கு அரும்பொருள் ஈந்து பெரும்பணி புரிந்தனர். அவர்களின் பெயர் உரைக்கின் கட்டுரை நீண்டு கொண்டேபோகும்.

நாளடைவில் ஆலயத்திற்கு நவக்கிரக மண்டபமும், விஷ்ணு, சுப்பிரமணிய, நடராச திருவுருவங்களும், அவர்களுக்குத் தனித்தனி மண்டபங்களும் அமைந்து இன்று கோயில் அழகாகத் திகழ்கிறது. மூலஸ்தானமும் வசந்தமண்டபமும் வேறு சில பகுதிகளும் புனரமைக்கப்பட்டு, நிகழும் பரிதாபி வருடம் தை மாதம் 19ஆம் நாள் கிரியாரம்பமும், 21ஆம் நாள் யாகாரம்பமும், 23ஆம் நாள் (5 - 2 - 73) தொடக்கம் மகா கும்பாபிஷேகமும் 48ஆம் நாளன்று சகஸ்ரசதசங்காபிஷேகமும் நிகழ இருக்கின்றன. புதுக்கலையுடன் கண்கொள்ளாக் கவின் அழகு கொண்டு இன்று ஆலயம் விளங்குகிறது. ஆலய அர்ச்சகர் சிவஸ்ரீ ஐ. குமாரராசாக் குருக்கள் தாடி வளர்த்து ஆலயத்தின் புனருத்தாரண வேலைகளை மேற்கொண்டு தவம் இருப்பவர். ஊரவரை நாடி உதவி வேண்டி அரும் பாடுபடும் அவருக்கும் ஆலய பரிபாலன சபைக்கும் குப்பிழான் மக்கள் நன்றியுடையவர்களாவார்கள். கருணைக் கடவுளாகிய கற்கரைக் கற்பக விநாயகன் திருவருள் நமக்கெல்லாம் கிடைப்பதாக!

"சிரார் தில்லைச் சிவன்மைந்தா!
சிமயத் தரசி முதல்மைந்தா!
சிறியேன் நாவில் சிலசொற்கள்
சேரப் புரிந்தாய்; எந்தாய்நின்
பேரார் சொன்னர் அன்னர்தம்
பெரும்பிழை யெல்லாம் பொறுத்தருளும்
பேழை வயிற்றோய்! கற்கரையின்
பெம்மான் பாதம் அடைக்கலமே!"

பிரதம குருக்கள் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள்:

இவரின் தலைமையில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகமும் சகஸ்ரசத சங்காபிஷேகமும் நடைபெறுகின்றன. நயினாதீவில் பிறந்த குருக்கள் அவர்கள் இந்தியா சென்று ஆகம, வைதீகக் கிரியைகளை பல ஆண்டுகள் முறையாகப் பயின்றார். "ஆகமாமிர்த வர்ஷணீ" என்ற புத்தகத்தில் பல கிரந்தங்களைத் தமிழில் மொழி பெயர்த்துச் சைவ உலகுக்கு அருந்தொண்டாற்றினர். "ஈசான சிவாச்சாரியார்" என்ற தீக்ஷாநாமத்தைப் பெற்ற இவரை ஞானசம்பந்தராதீனம் "சிவாகம ஞான பானு" என்ற பட்டமளித்துக் கௌரவித்தது. புள்ளிருக்குவேளூரில் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தில் கலந்து தருமபுர ஆதீனத்தினால் வழங்கப்பட்ட "பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டா பூஷணம்'' என்ற பெயரைச் சூடினர். 6-1-70 தொடக்கம் 29-1-70 வரை யாழ். இந்துக் கல்லூரியில் மெய்கண்டார் கழகத்தின் சார்பில் நடாத்தியருளிய சைவ சித்தாந்த வகுப்பில் சிவஞான சித்தியார் முழுதும் கற்றுணர்ந்த நல்லறிஞர்களுள் ஒருவராய் இவருக்கு மேற்படி குருமகா சந்நிதானம் சான்றிதழ் வழங்கிப் பாராட்டியது. இத்தகைய பெரியாரின் தலைமையில் ஆலயத்தின் கிரியைகள் நடப்பதை எண்ணிக் குப்பிழான் மக்கள் பெருமைப்படுகிறார்கள்.

ஆலய அர்ச்சகர் **சிவஸ்ரீ ஐ. குமாரராசாக்குருக்கள்:**

ஆனைமுகன் அடிவணங்கும் அந்தணன்காண்! அடியவர்கள் உழம்நெகிழ அர்ச்சனைகள்
தானுணர்ந்து புரிகின்ற தகைமையினன் தாழ்சடையும் நீள்முடியும் தரித்தபோதும்
கானமரும் முனிவனல்லன்; களிற்றுமுகக் கடவுள்தலம் பெருக்கவந்த கர்மயோகி!
தேனமரும் இன்சொல்லால் எதுவும்வெல்லும் திறல்வீரன் குமாரையர் நீடுவாழி!

இது கற்பனையில் எழுந்த கவிதையல்ல. சிவஸ்ரீ ஐ. குமாரராசார்க் குருக்கள்பற்றிய உண்மை ஓவியம் இது. ஆலய வளர்ச்சியை மனதிற்கொண்டு அருந்தொண்டாற்றும் இவரின் அர்ச்சனைகள் பார்ப்போர் உள்ளத்தைப் பரவசப்படுத்தும். இவரின் புகைப்படம் ஒன்றை இம்மலரிற் பேர்ட விரும்பினேம். பணிவன்புடன் மறுத்து விட்டார்.

சிற்பக்கலைஞர் **சோமசுந்தரம் சேதுபதி:**

நீராவியடியில் வசிக்கும் இவரின் தலைமையில் கோவில் புனருத்தாரண வேலைகள் திறம்பட நடந்து நிறைவுபெற்றுள்ளன. பல கோயில்களில் கோபுரங்களையும் மண்டபங்களையும் அழகுடன் அமைத்த இவரின் கைவண்ணத்தைக் குப்பிழான் கற்கரைப் பிள்ளையார் கோவிலிற் கண்டு களிக்கலாம்.

— ஆசிரியர்

காணியும் இல்லை, கலியாணமும் இல்லை!

— செ. தனபாலசிங்கன், B. A. —

செந்தமிழ்ச் சைவப் பெருமக்கள் பிள்ளையாருக்கு ஒரு பூசை செய்தே எந்தக் காரியத்தையும் செய்யத் தொடங்குவார்கள். நினைத்தகாரியம் முட்டின்றி முடிய வேண்டும் என்று குட்டிக்குட்டிக் கும்பிடுவார்கள். நாயகன் இல்லாதவர் விநாயகர் (வி + நாயகர்; விமலன் = மலம் இல்லாதவன் என்பதைப்போல). தமக்கு ஒரு நாயகன் இல்லாத அநாயக நிலையிலும் தாமே எல்லா நாயகர்களுக்கும் நாயகராகிய ஏகநாயக நிலையிலும் உள்ளவர் விநாயகர். இந்த உண்மையைத் தெரிந்து தானே நம்மவர்கள் அவன் சன்னிதியில் தோப்புக்கரணம் போடுகிறார்கள்! விநாயகப் பெருமான் அருந்தமிழ்ப் புலமையையும் பெரும்புகழ் நிலையையும் தருவான். குருவடிவாகிக் குவலயந்தன்னில் உவட்டா உபதேசம் புகட்டுவான். தெவிட்டாத ஞானத்தெளிவைக் காட்டுவான். ஐம்புலன்தன்னை அடக்கும் உபாயம் அருளுவான். இருவினை அறுத்து இருள்கடிந்து முன்னை வினையின் முதலைக் களைவான். மலம் ஒருமூன்றின் மயக்கம் அறுப்பான். அல்லல் களைந்தே அருள்வழி காட்டி எல்லை இல்லா ஆனந்தம் அளித்துச் சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டுவான். இப்படி அவன் செய்கின்ற நலன்களுக்குத் தான் எல்லையேது? 'ஓத வினை அகலும்; ஓங்கு புகழ் பெருகும்; காதற் பொருள் அனைத்தும் கைகூடும்' என்ற பெரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையால் பிள்ளையார் தமிழ்மக்கள் உள்ளத்திலே பெரியதோர் இடத்தைப் பெற்றுவிட்டார்.

காதற்பொருள் அனைத்தும் கைகூடும் என்ற பெருநம்பிக்கை முருகப்பெருமானுக்கே இருக்கிறது என்றால் நாம் என்ன சொல்ல இருக்கிறது. வள்ளி திருமணம் எத்தனையோ சினிமாத் திரைகளிலும் நாடகமேடைகளிலும் பார்த்தும் இன்று வரை அலுப்புத் தட்டாத ஒரு கதை. 'தந்திமுகத்து எந்தைதனை முன்னே வருவாய் முதல்வா' என்று அழைக்கிறான் முருகன். மறிகடல்போல் முழங்கிவருகிறது தந்திக்கடவுள்; தனிவாரணப் பொருப்பு. 'இவ்வேழம் காத்தருள்க; எந்தை நீர் சொற்றபடி செய்வேன்' என்று ஒருபால் சேர்ந்து முருகனையே தழுவிக்கொள்கிறாள் வள்ளி. திருமணமும் இனிதே நிறைவேறுகிறது.

வள்ளிக்கு வழிகாட்ட இந்த அண்ணனை அழைக்கிறார் ஆறுமுகப் பெருமான். அண்ணன் அங்கே வருகிறார். இங்கே அரிய பெரிய கருத்து, மாபெரும் தத்துவம் மறைந்துகிடக்கிறது. தற்போத முனைப்புக்கெட - பசுபோதம் நீங்க ஞானசிரியன் உயிருக்குப் பிரணவ மந்திர உபதேசம் செய்வான். பிரணவ மந்திர உபதேசத்தினால் தற்போதம் அடங்கும். தற்போதம் அடங்கினால், 'என் செயலாலாவது யாதொன்றுமில்லை; தெய்வமே நின்செயலே' என்ற தெளிவு ஏற்படும். ஜீவன் சிவனை முன்னிட்டுச் சிவனில் அடங்கும். "துன்னிய ஐம்புல வேடர் சுழலிற்பட்டுத் துணைவனையும் அறியாது துயருறும் தொல்லுயிரை மன்னும் அருட்குருவாகி வந்து அவரின் துயர் நீக்கி மலம் அகற்றி மலர்அடிக்கீழ் வைப்பான்" என்ற சித்தியாருக்கு, வள்ளி திருமணம் இலக்கியமாகி வாழ வழிகாட்டவில்லையா? ஓங்காரமும் முருகப்பெருமானும் வள்ளி அம்மையாரும் ஒருமையுறும் நிலை அற்புதம்! அற்புதம்!!

பாசம் ஒரு பெரிய கடல். அது பரந்து விரிந்துகிடக்கிறது. பாவம், புண்ணியம் என்ற அலைகள் அங்கே மோதி அடிக்கின்றன. உயிர் அந்த வினைகளாம் அலைகளின் இடையே சிக்கி அல்லற்புண்டு தடுமாறித் தத்தளிக்கின்றது. இருவினையாகிய கடலைக் கடந்து இருவினை ஒப்பாகிய கரையை அடையவேண்டுமே! அந்தக் கரைதான் பாசநீக்கமாகிய கரை. வினைகள் இரண்டு; நல்வினை, தீவினை என்பன அவை. நல்வினை பொன் விலங்கு. தீவினை இரும்பு விலங்கு. வினையே நம்மைப் பாசக் கட்டில் தள்ளிவிடுகிறது. வினைவிலங்கு நீங்கினால் தேகம் என்னும் சிறை ஒழியும். இந்த வினைக்குக் காரணம் பசுபோதம். இறைவனை உணரவிடாமல் செம்பிலே களிம்புபோல நம்மிடம் பசுபோதம் இருக்கின்றது. இந்தக் களிம்பு நீங்கினால் நமக்கு இன்பம் உண்டாகும். நீங்குவதற்கு வழி யென்ன? ஒரு வழியுண்டு. பசுபோதத்தை ஏற்றுக்கொள்வதற்கு ஒருவர் இருக்கிறார். அவரிடம் கொடுத்துவிடவேண்டியதுதான். அவர் யார் தெரியுமா? அவர்தான் தொப்பையப்பன்; நம்முடைய பிள்ளையார்; சித்திவேழம். பசுபோதத்தைக் கவளமாக்கிக் கொடுத்துவிட்டால் களிப்பாக உண்ணுமாம் அந்த வேழம். நாம் கொடுப்பது கள்ளவினைப் பசுபோதம்; அதனைப் பெற்றுக்கொண்டு நமக்குச் சித்தி வேழம் தருவது கருணை! எங்கே அந்தத் திருவிளையாடலைப் பார்ப்போம்!

"உள்ளமெனும் கூடத்துள் ஊக்கமெனும்
தறிநிறுவி உறுதி யாகத்
தள்ளரிய அன்பென்னும் தொடர்பூட்டி
இடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்"

(திருவிளையாடற்புராணம்)

எல்லா மந்திரங்களுக்கும் மூலமாகவும் முடிவாகவும் இருப்பது பிரணவ மந்திரம். எல்லா மந்திரங்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு விளங்கும் பிரணவ மந்திர உபதேசத்தினால் ஓம் என்பதன் உருவம் மனக்கண்ணில் ஒளிமயமாகத் தோன்றும். அந்த ஓங்கார ஒளிக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் திருவுருவம் தோன்றும். யான், எனது என்ற அகந்தையை நீங்கி ஐம் புலன்களையும் சுட்டறுத்து ஓங்கார ஒளிக் குள்ளே இறைவனைக் கண்டால் அதுவே பரமானந்தம்—தூங்காத் தூக்கம். 'ஆங் காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத் துத், தூங்காமல் தூக்கிச் சுகம்பெறுவ தெக்காலம்' என்று பத்திரகிரியார் அங்கலாய்க்கிறார். செயல் எல்லாம் இறை வன் செயல்; தன்செயல் அன்று என்ற தெளிவு ஏற்படும்போது தூங்காமற் தூங்கலாம். தூங்காமற் தூங்கினால் சீவன் சிவத்துள் அடங்கும்.

பிரணவப்பொருள் விநாயகப் பெரு மான். பிரணவப் பொருளாம் பெருந் தகை ஐங்கரன், சரணவற் புதமலர் தலைக் கணி வோமே' என்பது நறுந்தொகைக் கடவுள் வாழ்த்து. பிள்ளையார் பிரணவ சொரூபமாக அமைந்திருப்பதனாலேயே விநாயகப்பெருமானை ஓங்கார விநாயகர் என்கிறோம். அருளாளர்கள் மிகப் பெரிய தத்துவத்தை உருவகப்படுத்தி ஆனைமுகப் பெருமானை ஓங்காரமூர்த்தியாக்கி தம்மை அவன் திருமுன் தோப்புக்கரணம் போடச் செய்திருக்கிறார்கள்; மண்டையைக் குட்டி மண்டியிடச் செய்திருக்கிறார்கள்.

இன்னோரன்ன பெருமைவாய்ந்த பிள்ளையார் நமக்கெல்லாம் அருள்புரிய வேண்டுமென்று கண்ட கண்ட இடங் களிலே 'ஐம்' என்று இருந்துவிடுகிறார். நம்முடைய நாட்டிலே கோவில் இல்லாத ஊரில்லை; பிள்ளையார் இல்லாத கோயில் இல்லை. இதுமட்டுமா? திண்ணைத்தண்டை, குளக் கரைகளிலும் இடம்பிடித்துவிடு கிறார். எதை நிவேதித்தாலும் பானை வயிற்றிலே போட்டுக்கொள்வார். அவல், பொரி, கடலை, பழம், சர்க்கரை, பருப்பு, நெய், தேங்காய், எள்ளுருண்டை, கொழுக்கட்டை எதைக் கொடுத்தாலும் பரம திருப்தியுடன் ஏற்றுக்கொண்டு அருள்புரிவார். இந்தக் கட்டைப் பிரம்மச் சாரி இளையோன் முருகன் உரிய பருவத் தில் மணம்முடிக்க உதவினான். முருக னுக்கு ஒன்றிற்கு இரண்டாகப் பெண் டாட்டிகள் இருவர்! முருகனுக்கு மனைவிகள் எல்லாம் சீதனம்! தொந்தி வயிற்று ஐந்து கரத்து ஆனைமுகப் பெருமானுக்குக் காணியும் இல்லை; கலியாணமும் இல்லை! குடும்பத் தொந்தரவுகள் அத்தனையையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறா னென்று சொல்லவேண்டியது இல்லையே.

குப்பிழானிலேயும் கோயில்கொண்ட இந்தப் பிள்ளையார் சாதாரண பேர்வழி இல்லை. கேட்ட வரம் அளிக்கும் கீர்த்தி யுள்ள தெய்வம். இதைத் தெரியாமலா பாரதி பாடுகிறான்:

"கற்பக விநாயகக் கடவுளே போற்றி!
சிற்பர மோனத் தேவன் வாழ்க!
வாரண முகத்தான் மலர்த்தாள் வெல்க!
ஆரண முகத்தான் அருட்பதம் வெல்க!
படைப்புக்கு இறைவன் பண்ணவர் நாயகன்
இந்திர குருஎன திதயத் தொளிர்வான்
சந்திர மௌலித் தலைவன் மைந்தன்
கணபதி தாளைக் கருத்திடை வைப்போம்;
குணமதிற் பலவாம் கூறக் கேளிர்!
உட்செவி திறக்கும்; அகக்கண் ஒளிதரும்;
அக்கினி தோன்றும்; ஆண்மை வலிவுறும்;
திக்கெலாம் வென்று ஜெயக்கொடி
நாட்டலாம்;
கட்செவி தன்னைக் கையிலே எடுக்கலாம்;
விடத்தையும் நோவையும் வெம்பகை
யதனையும்
துச்சமென் றெண்ணித் துயரிலா திங்கு
நிச்சலும் வாழ்ந்து நிலைபெற் றேங்கலாம்;
அச்சந் தீரும்; அமுதம் விளையும்;
வித்தை வளரும்: வேள்வி ஓங்கும்;
அமரத் தன்மை எய்தவும்
இங்குநாம் பெறலாம் இஃதுணர் வீரே!"

கற்பகவிநாயகனுக்குக் காணியும் இல்லை; கலியாணமும் இல்லை. ஆனால் நமக்குக் காணியும் தருவான்; கலியாண மும் தருவான்.

நாலுபேர் மெச்சப் புரியும் வழிபாடு அகந்தையையே வெளிப்படுத்துவ தாகும். எளியோருக்குத் தொண்டு செய்வதுதான் உண்மையான கடவுள் தொண்டாகும்.

— காந்தியடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணபத்யம் – வரலாறும் சிறப்பும்

— வி. சிவசாமி, B. A.(Hons); M.A.—

பொது :

கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்ட ஆறு உட்பிரிவுகளில் இஃதும் ஒன்றாகும். ஏனையவை சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம், சௌரம் என்பனவாம். இந்துக்கள் தாம் எதைத் தொடங்குமுன்பும் கணபதியையே வழிபடுவர். தமிழர் இப் பெருமானைப் பிள்ளையார் எனப் பெரும்பாலும் அழைப்பர்; வணங்குவர்.

வரலாற்று மூலங்கள் :

காணபத்யத்தின் தொடக்ககால வரலாறு தெளிவில்லையாயினும், இதனைப் பற்றிய வேத இலக்கியம், இதிஹாஸங்கள், புராணங்கள், பிற்கால நூல்கள், சாசனங்கள், கட்டிடங்கள், சிற்பங்கள் முதலிய பல மூலங்களிலே அறியக் கூடியதாயுள்ளது. இவற்றுள்ளே கணேச புராணமும், முட்கலபுராணமும் குறிப்பிடற்பாலன. கணேசபுராணம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. முட்கலபுராணம் பிரசுரிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பிற புராணங்களில் அங்குமிங்கும் கணேசரைப் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன.

தொன்மை :

இந்தியாவின் மிகப் பழைய நாகரிகமான சிந்துசமவெளி (ஹரப்பா) நாகரிகத்திலேயே கணபதி வழிபாடு நிலவிற்று எனலாம். யானை இந்தியாவின் புகழ் பெற்ற மிருகங்களில் ஒன்றாகும். இந்திய இலக்கியங்களில் மட்டுமன்றிச் சமயங்களிலும், கலைகளிலும் பிரதான இடம் ஒன்றினை வகிக்கின்றது. யானை பொறித்த முத்திரைகள் சிந்துசமவெளி நாகரிகச் சின்னங்களிலே கிடைத்துள்ளன. கூட்டுருவங்கள் பொறித்த முத்திரைகளும் உள்ளன. அண்மைக்காலத்திலே 'மின் மூனே' (கொம்பியூட்டர்) மூலம் சிந்து சமவெளி நாகரிக லிபிபற்றி ஆராய்ந்து வரும் ஸ்காந்திநேவிய ஆசியக் கல்வி நிறுவனத்தைச் சார்ந்த அஸ்கோபர், போலா முதலிய அறிஞரும் சிவவழிபாடு, விஷ்ணு வழிபாடு, கணபதி வழிபாடு முதலியன அந் நாகரிகத்திலேயே நிலவியதைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.[1] சிந்து சமவெளி நாகரிகம் ஆரியர் இந்தியாவுக்கு வருமுன்னரே நிலவியதென அறிஞர் பலர் கருதுவர். இந்தியாவின் முதுபெரும் மொழிநூலறிஞரான பேராசிரியர் சுநீதி குமார் சட்டர்ஜி,[2] அலிஸ்கெற்றி[3] ஆகியோரும் வேறு சிலரும்[4] கணபதி திராவிடத் தெய்வம் என்றே கருதுகின்றனர். மானவ தர்ம சாஸ்திரத்தில் வரும் தனிப் பட்ட செய்யுள் ஒன்றிலே "கணேசர் சூத்திரரின் தெய்வம்" என்று கூறப்பட்டுள்ளது.[5]

மேலும், சிந்துசமவெளி நாகரிகத்தின் இறுதிக் கட்டத்தினைச் சேர்ந்த தொல் பொருளியற் சின்னங்கள் குஜராத், மஹாராஷ்டிரத்தின் வடமேற்குப்பகுதி ஆகிய வற்றிலும் கிடைத்துள்ளன. இன்றும் மஹாராட்டிர மாநிலத்திலே கணபதி வழிபாடு மேலான இடத்தினை வகிக்கின்றது. கணபதிக்குரிய மிகச்சிறந்த ஆவணிச் சதுர்த்தித் திருவிழா மஹாராஷ்டிரத்தின் தேசிய விழாவாகும். காணபத்யம்பற்றிய

---

1. News letter of the Scandinavian Institute of Asian Studies No. 3 Jan. 1970 Copenhagen ப. 6 - 8.
2. Majumdar R. C. (Ed.) The Vedic Age Bombay 1965 ப. 164 - 165.
3. Alice Getty - Ganesa - Oxford University Press 1936 ப. 1.
4. Alice Getty மேற்படி.
5. Alice Getty மேற்படி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக விரிவான நூல் மஹாராஷ்டிர மொழியிலே 'கணேசகோசம்' என்ற பெயரில் வெளிவந்துள்ளது. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலே இந்தியாவின் புகழ்பெற்ற விடுதலை வீரரான பாலகங்காதர திலக் என்பவர் கணபதி விழாக்களைப் பயன் படுத்தி இந்திய தேசிய வாதத்தினை வளர்த்தமை குறிப்பிடற்பாலது.

மிகப் பழையகால எகிப்திய, மெசொப்பொத்தேமிய, கிரேக்கத் தெய்வங்களிலே மிருகம், பறவைத் தலைகளுடன் மனித உருவங்களும் சேர்ந்து காணப் பட்டன. ரோம்நாட்டு ஜேனூஸ், எகிப்திய கேதேய் ஆகிய தெய்வங்களிலே விநாயகரின் அம்சங்கள் சில காணப்பட்டன. ஒருவேளை விநாயகரைப்பற்றிய சில கருத்துக்கள் மேற்கு ஆசிய எகிப்திய நாகரிகங்களிலிருந்து மிகப் பழையகாலத்திலே பரவியிருக்கலாம்.[6]

வடமொழி இலக்கியம்:

கணபதியைப்பற்றிய மிகப் பழைய குறிப்புக்கள் இலக்கியரீதியிலே இருக்கு வேதத்தில் ஈரிடங்களிலே பிரஹ்மணஸ்பதி பற்றிய திருப்பாடலிலும் (2.23.1), இந்திரனைப் பற்றிய திருப்பாடலிலும் (10.112.9) வருகின்றன. இவற்றுள் முன்னையது குறிப்பிடற்பாலது. இன்று பல்வேறு உலகியல் சார்பான, சமயச் சார்பான கிரியைகளிலே கணேசரை ஆவாஹனம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பிரதான் மந்திரமாக ஓதப்படும். அதாவது, "தெய்வங்களின் மிகப் பிரதான தலைவரும், முதலில் உதித்தவரும், ஞானிகளிலே மிகச் சிறந்தவரும், எவ்வகையான உணவுப்பொருட்களையும் அளவற்று வைத்திருப்பவருமாகிப் பிரார்த்தனையின் பெருந்தலைவரானவரே! (வேதங்களுக்கு முதல்வரானவரே!) தேவரீரை (அடியோமாகிய நாங்கள்) மெய்யன்புடன் வரவழைக்கின்றோம். எமது பிரார்த்தனைகளைத் திருச்செவிமடுத்துப் பாதுகாப்புடன் இக் கிரியையிலுள்ள திருவாசனத்திற்கு எழுந்தருளுவீராக" என்பதாம். எவரும் தாம் தொடங்கும் சமயக் கிரியையோ, தொழிலோ இனிது நிறைவேறுதலையே விரும்புவர். இதற்காக, இடையூறுகளை அகற்றும் விக்கினேஸ்வரரை இந்துக்கள் முதலிலே வழிபடுவர். மேற்குறிப்பிட்ட திருப்பாடல் இருக்குவேதத்திலே ஞானத்திற்குப் பேர்போன பிரஹ்மணஸ்பதி பற்றிய திருப்பாடலில் வருகின்றது. விநாயகரும் ஞானத்திலே மிக மேலானவர். இவரும் பிரஹ்மணஸ்பதியும் ஒரே தெய்வமெனப் பிற்கால நூல்கள் குறிப்பிடும்.

கிருஷ்ண யஜுர்வேதத்திலுள்ள சதருத்ரீயம் (45.4.1), வாஜசனேயி சம்ஹிதை (22.30) ஆகியவற்றிலும் கணபதி பற்றிய குறிப்புக்கள் வருகின்றன. முன்னையதில், உருத்திரனின் (சிவபிரானின்) 100 திருநாமங்களுக்கு வணக்கம் கூறப்படுகின்றன. அவற்றுள்ளே "கணபதிக்கு வணக்கம்" என்று சிவபெருமானுக்கே வணக்கம் செலுத்தப்படுகிறது. சிவபெருமானின் மூத்த திருக்குமாரராகவே பிள்ளையாரைக் கூறினும், இருவரும் ஒரே தெய்வத்தின் இருவேறு அம்சங்கள் என்பதே பொதுவான கருத்தாகும்.

ஐதரேய பிராஹ்மணத்திலே (1.21) நான்கு விநாயகர் விக்கினங்களை ஏற்படுத்துவோராகவும், அவர்களை எளிதிலே சாந்திப்படுத்தலாம் எனவும் கூறப்படுகிறது. தைத்திரீய ஆரண்யகத்திலே (10.1.5) கணேச காயத்திரீ மந்திரம் ஒன்றுள்ளது. அதாவது,

"தத்புருஷாயவித்மஹே வக்ரதுண்டாயதீமஹி
தன்னே தந்தி பிரசோதயாத்"

என்பதாம். இதனை, "தத்புருஷனைக் விளங்கும் பெருமானை உபதேசப்படி அறிவோம். வளைந்த துதிக்கையுடைய அவரைத் தியானஞ் செய்வோம். இவ்விடத்திலே யானைமுகப் பெருமான் எங்களின் புத்தி சக்திகளைத் தூண்டிவிடுவாராக!" எனத் தமிழிலே கூறலாம். இதில், அவர் தத்புருஷ, வக்ரதுண்ட,

6. Alice Getty மேற்படி ப. XIII, 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தி எனக் குறிப்பிடுகிறார். யானைமுகம் பற்றிய குறிப்பு வருவது கவனித்தற் குரியது. மானவ்ய கிருஹ்ய சூத்திரத் திலும் விநாயகரைப்பற்றிய குறிப்பு உள்ளது. (2.14). அதர்வசிரஸ் உபநிஷத் திலே உருத்திரனும் விநாயகரும் ஒருவரே யெனக் கூறப்பட்டுள்ளது. கணபதி உப நிஷத், கணபதியே ஏனைய தெய்வங் களிலும் மேலானவர் எனக் கூறும். இக் கருத்து நாராயணோபநிஷத் தேவீபுராணம் ஆகியவற்றிலும் காணப்படுகின்றது. இந் நூல்கள் பிற்காலத்தவை.

இதிஹாஸங்கள், புராணங்கள் :

இந் நூல்களிலே விநாயகப் பெரு மானைப்பற்றிய பல கதைகள், சம்பவங் கள், குணதிசயங்கள் முதலியன கூறப்படு கின்றன. அவரின் திருவவதாரம் விவரிக் கப்படுகின்றது. பொதுவாக அவர் சிவ பெருமான், உமாதேவி ஆகியோரின் மூத்த குமாரராகவும், முருகன் இளைய குமாரராகவும் கூறப்படுகின்றனர். அவரின் வீரதீரச் செயல்களிலே, கஜமுக அசுரனைச் சங்கரித்து உலகினைக் காப் பாற்றியமை, வியாசரின் வேண்டுகோ ளுக்கு இணங்கி மஹாபாரதத்தினைத் தமது திருமருப்புக்கொண்டு எழுதியமை முத லியவற்றினைக் குறிப்பிடலாம். இக் கதை கள், இறைவன் அன்பருக்கு எழுந்தருளி இன்னல்களைப் போக்குபவன் என்ற உண்மையினை எடுத்துக்காட்டுவன.

தொல்பொருளியற் சான்றுகள் :

இச் சான்றுகளை நோக்கும்போது கி. பி. இரண்டாம் நூற்றாண்டளவிலே வடமேற்கு இந்தியாவில் ஆட்சிசெய்த குஷாண மரபைச் சேர்ந்த ஹுவிஷ்க என்ற மன்னனின் நாணயத்திலே வரும் 'கணேச' என்ற பதத்தினை முதலிலே குறிப்பிடலாம். ஆனால் அதிலே காணப் படும் உருவம் சிவபெருமான் ஆகையால் இது அவரைக் குறித்திருக்கலாம்.[7] ஆனால், சிற்பங்களிலே குப்தர்காலம் தொட்டுத் தான் (கி. பி. 4 - 5ஆம் நூற்றாண்டள வில்) கணேசரின் வடிவங்கள் பெரிய அளவில் இடம்பெறலாயின. வட இந்தியா, தென்னிந்தியாவில் மட்டுமன்றி இந்தியா வுக்கு வெளியே ஆபுகானிஸ்தான், ஈழம் ஆகிய இடங்களிலும் கி. பி. 4 - 5ஆம் நூற்றாண்டளவைச் சேர்ந்த கணபதி சிலைகள் கிடைத்துள்ளன.[8] இவற்றிற்கு முன்னோடியான சிலைகள் கிடைத்தில. ஆனால், தொடர்ந்து இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் கணபதி சிலைகள் வெளிவந்தன. இக்காலந் தொட்டுத்தான் காணபத்யம்பற்றித் தொடர்ச்சியாக்க் கூறக்கூடியதாயுள்ளது.

இதுவரை கிடைத்த சான்றுகளின்படி சாசனரீதியிலே கணபதி வணக்கம் கூறும் காலத்தால் முந்திய சாசனம் கி. பி. 9ஆம் நூற்றாண்டையது.[9]

தமிழகத்திலே கணபதி வழிபாடு :

கி. பி. 7ஆம் நூற்றாண்டிலே தமிழகத் தின் பெரும் பகுதியினை ஆட்சிசெய்த பல்லவ நரசிம்மவர்மனின் வாதாபிச் சாளுக்கியருக்கு எதிரான வெற்றிக்குப் பின்னரே இவ் வழிபாடு தமிழகத்திலேற் பட்டதாக வரலாற்றாசிரியர்கள் ஒரு சாரார் கருதுவர். அப் போரின்பின் பல்லவ தளபதியான பரஞ்சோதியார் (சிறுத்தொண்டர்) வாதாபியிலிருந்து கொண்டுவந்த பொருட்களிலே பிள்ளை யார் சிலையுமொன்றாகும். இச் சிலையினைப் பிரதிஷ்டைசெய்து கோவிலொன்று கட்டி னன். இதுவே கணபதீச்சுரம் என்றழைக்

---

7. Alice Getty மேற்படி ப. 10.
8. i. Ramachandran T. N. "Vighnesvara Images in Afghanistan" Madras Hindu Weekly Magazine Sept. 11 - 1961.
   ii. Dhavalikar M. K. "Ganesa beyond India's frontiers" — Bhavan's Journal XVIII No. 2. August 22 - 1971. ப. 26 - 30.
9. Alice Getty மே. கு. நூ. ப. 30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படும் தலமாகும். மேற்குறிப்பிட்ட சம்பவம்பற்றிய குறிப்பு, பிற்காலக் கீர்த்தனங்களிலும் வருகின்றது. எடுத்துக் காட்டாக, "வாதாபி கணபதிம் பஜே" எனத் தொடங்கும் சாமுத்ராலாவின் பாடலைக் குறிப்பிடலாம். மேற் குறிப் பிட்ட காலந்தொட்டுத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் கணபதி ஆலயங்கள் அமைக் கப்பட்டதாகவும், காலப்போக்கில் அவ ருக்கு முதலிடம் அளிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இத்தகைய கருத்தினைப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தர ரும் "பிறந்தது எப்படியோ" என்ற கட்டுரையிலே குறிப்பிட்டுள்ளார்.[10] ஆனால் வாதாபியிலிருந்து சிலை வரு முன்னரே தமிழகத்திலே கணபதி வழி பாடு நிலவியது. ஒரு புதிய தெய்வம் உடனடியாகப் பெருஞ் செல்வாக்கைப் பெற்றிருக்கமுடியாது. அதுமட்டுமன்றி அவரும் தாம் அறிந்த, தாம் வழிபடும், தாம் ஈடுபாடு கொண்டுள்ள தெய்வத்தின் சிலையினைக் கொண்டு வருவார்களேயன்றி முன்பின் அறியாத சிலையினைக் கொண்டு வந்து வழிபட்டனர் என்பதை எளிதில் ஏற்றுக்கொள்ள முடியாது.

கி. பி. ஏழாம் நூற்றாண்டிலே வாழ்ந்த சைவ நாயன்மாரான திருஞானசம்பந்த ரும்[11] திருநாவுக்கரசரும்[12] தத்தம் தேவாரங்களிலே கணபதியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். திருஞானசம்பந் தரின்,

"பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே."

என்ற தேவாரத்திலே பிள்ளையார் சிவ குமாரர் என்பதையும், விக்கினேஸ்வரர் என்பதையும் தெளிவாகக் காணலாம். இதுபோன்ற கருத்து, சம்பந்தரின் வேறு சில தேவாரங்களிலும், திருநாவுக்கரசரின் தேவாரங்களிலும் காணப்படுகின்றது. எனவே, இவர்களின் காலத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னராவது இவ் வழிபாடு நிலவித் தமிழர் நாகரிகத்திலே நன்கு கலந்திருக்கவேண்டும். அத்தகைய சூழ்நிலையிலேதான் மேற் குறிப்பிட்ட கருத்துக்கள் இடம்பெறுதல் எளிதாகும்.

மேலுமிதற்கு முற்பட்ட தமிழ் நூல் களிலே (சங்கநூல்கள், சிலப்பதிகாரம் முதலியன) கணபதிபற்றிய குறிப்பு இல்லாதபடியாலே தமிழகத்திலே இவ் வணக்கம் நிலவவில்லையென்று ஆணித் தரமாகக் கூறமுடியாது. இந் நூல்கள் சமய நூல்களன்றி உலகியல் சார்பான நூல்கள் என்பதை மனதிற் கொள்ள வேண்டும். சங்க நூல்களிலோ, சிலப்பதி காரத்திலோ லிங்க வழிபாடுபற்றி குறிப்பு எதுவும் தெளிவாக இல்லை. ஆனால் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த புகழ் பெற்ற லிங்கம் ஒன்று குடிமல்லம் என்ற இடத்திலே கிடைத்துள்ளது.[13] இதற்கு யாது நியாயம் கூறலாம். திருவாவடுதுறை

---

10. மீனாட்சிசுந்தரனார் தெ. பொ. "பிறந்தது எப்படியோ?" சென்னை. 1971 ப. 1 - 8. சிறுத்தொண்டர் கட்டிய பிள்ளையார் ஆலயம் திருச்செங்காட் டங்குடியிலுள்ள கணபதீச்சுரமாகும்.

11. திருஞானசம்பந்தர்: (1) திருவலிவலம் - "பிடியதனுரு", திருவிராமனதீச் சுரம் - "தாழ்சடையோன் தந்த மதத்தவன்", (2) சீகாழி - "கரியின் மாமுக முடைய கணபதியின் தாதை".

12. திருநாவுக்கரசர்: (4) திருவதிகை வீரட்டானம் - "கணபதி என்னும் களிறு". (6) திருவீழிமிழலை - "கைவேழ முகத்தவனைப் படைத்தவர் போலும், கஜா சுரனை யவனைற் கொல்வித்தார் போலும்". (6) திருவாய்மூர் - "மெல்லியலும் விநாயகனும் தோன்றக் கண்டேன்".

13. Coomaraswamy Ananda K. - Introduction to Indian Art - Madras 1923 ப. 34-36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதீன மஹர்வித்துவான் ச. தண்டபாணி தேசிகர், திரு.கி.வா.ஜகந்நாதன் போன்ற அறிஞர், தமிழகத்திலே கி. பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே பிள்ளையார் வழிபாடு நிலவியதை வற்புறுத்தியுள்ளனர்.[14] தமிழகத்திலே பல்லவர்-பாண்டியர் காலத்தில் (கி. பி. 6 - 10ஆம் நூற்றாண்டுவரை) ஏற்பட்ட வைதிக சமய மறுமலர்ச்சியுடனும், குறிப்பாக அதற்குப் பின்னரும் கணபதி வழிபாடு மேலும் பிரபல்யமடைந்தது.

கி. பி. 10ஆம் நூற்றாண்டளவிலே கணபதி வழிபாட்டினை மேலாக வற்புறுத்திய காணபத்யர் (கணபதி வழிபாட்டினர்) என்போர் பிற தெய்வங்களிலும் பார்க்க இவருக்கே முதலிடம் அளித்தனர். அவர்கள் தமது கருத்துக்களைப் பல இடங்களிலும் பரப்பினராம். இவர்களின் முயற்சியாலே இந்து சமயத்தின் பிற உட்பிரிவினர் தத்தம் பிரிவிற்கும் உரியவராகக் கணபதியினை ஏற்றுக் கொண்டனர் எனக் கூறப்படுகின்றது.[15] தமிழகத்தில் இக் காலத்திற்கு முன்னரே பிரபல்யமான தெய்வமாகிவிட்டார். இவருக்கெனத் தனிக் கோவில்கள் மட்டுமன்றிப் பிற தெய்வங்களின் கோவில்களிலும் முக்கியமான இடமொன்று அளிக்கப்பட்டது. கணபதிக்குரிய பெரிய கோவில்களிலே திருச்சிராப்பள்ளியிலுள்ள கற்பாறை உச்சிப்பிள்ளையார் கோவிலைக் குறிப்பிடலாம்.

கி. பி. எட்டாம் நூற்றாண்டளவிலே வாழ்ந்த பெரிய வேதாந்த தத்துவ ஆசிரியரான சங்கராச்சாரியர் இந்தியா அடங்கிலும் சென்று வேதாந்தத்தினையும், இந்து சமய உட்பிரிவுகளான ஷண்மதங்களையும் மேலும் நிலைநாட்டியவர் என்பது குறிப்பிடற்பாலது. இவர் கணபதிமீது பாடிய ஸ்தோத்திரங்கள் 'கணேச பஞ்சரத்தினம்' என்றழைக்கப்படும்.

மஹாராஷ்டிரம் போன்று தமிழகத்திலும் கணபதிக்கே பிரபல்யமான இடமுண்டு. 'நமது சமுதாய வாழ்க்கையிலே பிள்ளையார்போலக் கலந்துகொண்டிருக்கும் தெய்வம் வேறெதுவுமில்லை' என்று கூறுதல் தவறாகாது எனப், பி. ஸ்ரீ என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.[16] மேலும் மு. சதாசிவம் என்ற அறிஞர் 755 தமிழ்நூல்களிலே பிள்ளையார்பற்றி வரும் குறிப்புக்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.[17] இதன்மூலமும் தமிழர் மத்தியிலே பிள்ளையார் எத்தகைய இடத்தினைப் பெற்றிருக்கிறார் என்பதை அறியலாம். தமிழகத்திலும், தமிழர் ஓரளவு தொகையாக உள்ள பிற நாடுகளிலும் பிள்ளையார் கோவில் இல்லாத இடமில்லை எனலாம்.

கணபதியின் திருநாமங்கள்:

கணபதி (சிவகணங்களின் தலைவன்), விநாயகன் (தனக்கொரு தலைவனில்லாதவன்), வக்ரதுண்டன் (வளைந்த துதிக்கையுடையவன்), கஜானன் (ஆனைமுகன்), மூஷிகவாஹனன் (எலியினை வாஹனமாகக் கொண்டவன்), ஏகதந்தன் (ஒற்றைக் கொம்பன்), சித்திதாதா (சிந்தனை வழங்குபவன்) முதலிய பெருந்தொகையான திருநாமங்கள் கணேசருக்கு உள்ளன. இவற்றைக் குறிப்பாக, கணபதி அஷ்டோத்

---

14. i. தண்டபாணிதேசிகர் ச. கணபதி - திருவாவடுதுறை - 1956.
ii. திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் - 1969ஆம் ஆண்டு நடைபெற்ற சங்கர ஷண்மத மகாநாட்டிலே குறிப்பிட்டார்.

15. i. Alice Getty - மே. கு. நூ. 19
ii. Heras Fr. H. - "The Problem of Ganapati" Tamil Culture iii. 2. 1954 ப. 181.

16. பி. ஸ்ரீ. - "பிள்ளையார் வரலாறும் வழிபாடும்." சென்னை 1962 ப.20.

17. சதாசிவம் மு. - "விநாயக ரருட்செல்வம்." சென்னை 1966.

250262

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாசத நாமாவளி, சகஸ்ர நாமாவளி முதலியவற்றிலே பரக்கக் காணலாம்.[18] ஒவ்வொரு திருப்பெயருக்கும் முக்கியத்துவம் உண்டெனக் கணபதி வழிபாட்டினர் கூறுவர். மேலும், 'சங்கராய நம'' 'மகேஸ்வராய நம', 'பிரஹ்மணஸ்பதயே நம', 'சம்புதேஜஸே நம', 'விஷ்ணுலிங்காய நம', 'சிவாய நம' முதலிய நாமாவளி வணக்கத்தினைக் கூர்ந்து நோக்கும் போது சிவபெருமான், விநாயகர், முருகப் பிரான், திருமால் முதலிய தெய்வங்கள் ஒரே பரம்பொருளின் பல்வேறு அம்சங்களேயே குறிப்பன என்ற உண்மை புலப்படுகின்றது.

தமிழ்நாட்டிலே விநாயகரைப் பிள்ளையார் என்றே பொதுவாக அழைப்பர். தந்தத்தினைக் குறிக்கும் திராவிடச் சொல்லான பல்லு, 'பல்ல' என்ற சொல்லடியாகவே இப்பதம் தோன்றியதென ஒரு சாரார் கருதுவர்.[19] பக்தி என்ற அறிஞர், பிள்ளை என்ற சொல் யானைக்குட்டியைக் கருதும் என்பர்.[20] இறைவனைத் தலைசிறந்த பிள்ளையாகத் தமிழர் கண்டனர் எனத் தமிழறிஞரில் ஒருசாரார் குறிப்பிடுவர். பார்வதி பரமேஸ்வரரின் மூத்த பிள்ளையினை அன்பர்களும் அவ்வாறே செல்லமாக அழைப்பராம் என்பர். வேதகணங்களின் குறிப்பாகச் சிவகணங்களின் தலைவராகிப் பின்னர் யாவரினதும் தலைவராளர் எனலாம்.

கணபதி வடிவம்:

வேதங்களின் உட்பொருளும், சாரமும் ''ஓம்'' என்றே வைதிகர் கூறுவர். 'ஓம்' என்பதே பிரணவமாம். கணபதி வேத முதல்வனாக, ஞான வடிவினனாக 'ஓம்' போன்ற துதிக்கைத் திருமுகத்தினனாக ஓங்கார வடிவினன் என்றழைக்கப்படுகிறார். 'ஓம்' என்ற புனித வாசகம் வேதங்களிலே மட்டுமன்றி, பிற்கால நூல்களிலும், சாசனங்களிலும் பரக்கக் காணப்படுகிறது. சாசனங்களிலே சுமார் கி. பி. 3ஆம் நூற்றாண்டளவு தொடக்கம் பலவாறு எழுதப்பட்டு வந்தது.[21] தற்போதைய பிள்ளையார்சுழி தமிழகத்தில் வளர்ந்துவந்த நிலையினைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

பிள்ளையாருக்குப் பல்வேறு வடிவங்களிலே சிலைகள் அமைக்கப்பட்டன. பிற்காலத்திலே 51, 32, 16 எனப் பலவடிவங்கள் கூறப்பட்டுள்ளன. ஆரம்பகாலச் சிலைகளில் அவருக்குத் துதிக்கையும், இரு திருக்கரங்களும், பெரிய வயிறும் காணப்படுகின்றன. இன்று கிடைத்துள்ள காலத்தால் முந்திய விநாயகர் சிலைகள் ஆபுகானிஸ்தானிலுள்ள கபூலிலே கிடைத்துள்ளன.[22] இவை கி. பி. 4ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவை. கபூல் இந்துக்கள் இவற்றை இன்றும் வழிபடுகின்றனர்.[23] வடஇந்தியாவிலேயுள்ள பூமராவில் (மத்தியபிரதேசத்தில்) கிடைத்துள்ள கணேசர் சிலை, கணேசானி (கணேசசக்தி) யுடன் காணப்படுகிறது. சக்தி அவரின் வலது தொடையில் வீற்றிருந்து கொண்டு அவருக்கு லட்டுக்களைப் பாத்திரத்திலே வழங்குகிறார். இவற்றை அவர் துதிக்கையாலெடுக்கிறார். அவரின் திருக்கரங்களிலே பரசு, மருப்பு, மோதகம் முதலியன உள்ளன. ஒரு திருக்கரத்தி

---

18. பத்மநாபஐயர் சி. (பதிப்பு) விக்கினேஸ்வராஷ்டோத்தர ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரமும் நாமாவளியும் - கொழும்பு 1965.
19. Alice Getty மே. கு. நூ. ப. 1
20. Alice Getty ,,
21. i. Dani A. H. Indian Paloeography. Oxford University Press. 1963 ப. 118
ii. India Antiqua Leiden - 1947 ப. 40-56
22. அடிக்குறிப்பு 8 பார்க்க.
23. மேற்படி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுலே சக்தியினை அணைத்துக்கொள்ளு கிறார்.24 இத்தகைய முழுமையான சிற்பம் மிக முக்கியமானது. கலை நேர்த்திவாய்ந் தது. இதற்கு முன்னோடியாக ஒன்றும் கிடையாமை துரதிர்ஷ்டமே. அதைவிடத் தென்னாட்டிலே பெரும்பாலும் பிரமச் சாரியாக விளங்கும் கணேசர் சக்தியுடன் வடநாட்டிலே வீற்றிருப்பது குறிப்பிடற் பாலதே. இதற்கு எதிர்மாறாக முருகப் பெருமான் வடநாட்டிலே பெரும்பாலும் பிரமச்சாரியாகவும், தென்னாட்டிலே இரு சக்திகளுடனும் விளங்குகிறார்.விநாயகரின் பல்வேறு வடிவங்களிலே, பொதுவாகக் காணப்படும் சிலையிலே, முன் வலக்கையில் அங்குசமும், இடக்கையிற் பாசமும் காணப்படும்.துதிக்கை இடம்புரியாகவோ, வலம்புரியாகவோ விளங்கும். இடம்புரி யாக இருப்பின் மோதகத்தினைத் தொடும். இத்தகைய வடிவமே பெரும்பாலும் வழிபாட்டிலிடம்பெறுகின்றது. மோதகம் ஞானத்தினைக் குறிக்கும் என்பர்.

அவர் பிரமச்சாரியெனத் தமிழ்நாட் டிலே பொதுவாகக் கூறப்படினும், அவ ருக்கு ஒரு சக்தி, இரு சக்திகள் உள்ள தாகவே கூறப்படும். ஒரு சக்தியெனின் கணேசானி அல்லது வல்லபா என்றழைக் கப்படுவர். பிள்ளையாருடன் கூடிய முகூர்த்தம் வல்லபா கணேசராகும். இரு சக்திகள் சித்தி, புத்தி என்பவராம். கணேசர் ஞானவடிவினர், அறிவுத் தெய் வம், இடையூறுகளை நீக்குபவர் என்பதற் கேற்பச் சக்திகளும் இவ்வாறு அழைக்கப் படுகின்றனர்.

கணேசருக்கு ஒருமுகம் மட்டுமன்றிப் பல முகங்களும் உள்ளதாகக் கூறப்படும். பஞ்சமுக விநாயக வடிவம் தமிழ்நாட்டிலு முண்டு. சில இடங்களிலே லக்ஷ்மியுடன் சேர்ந்த கணபதி வடிவத்தினைக் காண லாம். சிவபெருமானைப்போன்று கணேச ரையும் லிங்க வடிவிலே வழிபடுவர். பொதுவாக மூஷிகமே விநாயகரின் ஊர்தி யாக விளங்கினாலும், சிலவேளைகளிலே சிங்கமும் இவரின் ஊர்தியாகக் கூறப்படு கின்றது.

முக்கியத்துவம்:

கணபதி பற்றிய கருத்துக்களைத் தொகுத்து நோக்கும்போது, அவர் பெரும் பாலும் விவசாயிகள் மத்தியிலே நன்கு போற்றப்பட்ட தெய்வமாகவும் காணப் படுகிறார். அவருடைய உருவ அமைப்பு, யானைமுகம், தின்பண்டங்களிலே பெரு விருப்பு, மூஷிக வாகனம் முதலியவற்றைக் குறிப்பிடலாம். சில அறிஞர், கணபதி சூரிய வழிபாட்டுடன் தொடர்புள்ள தென்பர்.25

விக்கினங்களைப் போக்கிச் சித்திகளை அளிப்பவர் என்ற கருத்து நன்கு நிலவ அவரின் வழிபாடும் பெருவழக்கிலேற்பட்ட தெனலாம். அவர் இடையூறுகளை ஏற் படுத்துவர்; தீர்ப்பர். ஆனால், எளிதிலே சாந்திப்படுத்துவர். அடியவரின் தவறு களை எளிதிலே மன்னித்துவிடுவார்.எவரும் விரும்பியவாறு வணங்கலாம். அவரின் வழிபாட்டுமுறை மிக எளிது. ஒன்று மில்லாவிடில் பசுச் சாணத்திலே வடிவம் செய்தும் வணங்கலாம். அறுகிலே விருப் புடையவர். ஆற்றங்கரை, குளக்கரை, வேப்பமரத்தடி, அரசமரத்தடி முதலிய பலவிடங்களில் மட்டுமன்றி வீடுகளிலும் இஷ்ட தெய்வமாக வணங்கப்படுகிறார்.

விநாயகர் அறிவுத் தெய்வம். அறிவே யாவற்றிலும் மேலானது. அவர் அன் பர்க்கினியவர். வேண்டுவார் வேண்டு வதை ஈபவர். இதனாலே பலதிறப்பட்ட மக்களும் - செல்வந்தர், வறியோர், மன் னர், சேவகர், அதிகாரிகள், பணியாட் கள், கல்விமான்கள், கல்வியற்றவர் இவ ரிடத்து ஈடுபாடு கொண்டுள்ளனர். ஆரிய திராவிட நாகரிகங்களின் முரணற்ற சங்க

---

24. i. Alice Getty - மே. கு. நூ. ப. 27
ii. Heras Fr. H. - மே. கு. ப. 179

25. Alice Getty - மே. கு. நூ. ப. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தினைக் காணபத்யத்திலும் காணலாம்.

இந்துசமயக் கிரியைகளிலே விக்கினேசரே முதலிடம் பெறுகிறார். இடையூறுகளை நீக்குவதற்கு அவரை வணங்கிய பின்னரே மற்றைய கடவுளருக்கு வழிபாடுகள் நடைபெறும். உலகியல் சார்பான விடயங்களைத் தொடங்கும்போதும் அவரை முதலில் வணங்குவர். ஏனைய இந்துத் தெய்வங்களின் கோவில்களிலும் அவருக்கு முக்கியமாக இடம் உள்ளது. கோவிலின் முற்பகுதியிலிருப்பார். உட்பிரகாரத்தின் வலது மூலையிலே பரிவார தெய்வமாக அமர்ந்து வலம்வருவோரின் முதலாவது பிரார்த்தனையினைப் பெறுகிறார். வைஷ்ணவர் இவரைத் தும்பிக்கை ஆழ்வாரெனப் போற்றுவர். விநாயகரை வழிபடும் சிறப்பான முறை பிற தெய்வ வழிபாடுகளிலிருந்து வேறுபட்டது. இதன்படி ஒருவர் தனது இரு கரங்களையும் முஷ்டியாகப் பிடித்துக்கொண்டு, தலையின் இரு பக்கங்களிலும் 3 அல்லது 5 முறை மாறிக் குட்டிக்கொள்ளுவர். பின் இரு கரங்களாலும் இரு செவிகளையும் மாறிப் பிடித்துக்கொண்டு மும்முறை இருந்து எழுந்து வழிபடுவர். இதனைத் தமிழிலே 'தோப்புக்கரணம்' (இரு காதுகளென வடமொழியிலே பொருள்படும் 'துவாப் யாம்கர்ண' என்பதன் திரிபாம்) என்பர். விநாயகரழித்த கஜமுகாசுரன் தேவர்களை இவ்வாறு முன் செய்விப்பித்தான் எனவும், அவனை அழித்த அப் பெருமானை அவர்கள் அவ்வாறு அவனுடைய வேண்டுகோளின்படி வழிபடலாயினர் எனவும் புராணங்கள் கூறும். சில நூல்களிலே, தான் தெரியாது செய்த பிழையினை மன்னித்தருளுமாறு இராவணன் இவ்வாறு வழிபட்டான் எனக் கூறப்படுகிறது. ஆனால், தத்துவ ஆசிரியர் இதற்கு ஞான ரீதியிலே வேறுவகையான விளக்கம் தருவர். அதாவது, இவ்வாறு செய்வதன் மூலம் மனிதனின் ஆத்மஞானசக்தி தூண்டப்பட்டு ஆன்மா இறைவனிடம் ஒருப்படுகின்றது.

இந்துசமயத்தின் உட்பிரிவுகளிலே மட்டுமன்றி வைதிக நெறிக்குப் புறம்பான சமணம் குறிப்பாகப் பௌத்தம் ஆகியவற்றிலும் விநாயகர் இடம்பெற்றுள்ளார்.

குஜராத்திலுள்ள கற்பாறையில் அமைந்த கோவில்களிலே சமணரும் விநாயகரை வழிபடுகின்றனர். சமண சமய வழிபாட்டிடங்கள் சிலவற்றிலே உலோகத்தாற் செய்த விநாயகர் சிலைகள் கிடைத்துள்ளன.[26]

புத்தசமயத்திலே கணபதிக்கு முக்கியமான இடமொன்றுண்டு. 'கணபதி ஹிருதயம்' என்ற மந்திரத்தினைப் புத்த பெருமானே தமது பிரதம சீடரான ஆனந்தருக்கு உபதேசித்ததாகக் கூறப்படுகின்றது. ஓரளவு வைதிக சமயங்கள் ஊடாகவும், முக்கியமாகப் பௌத்தம் மூலமாகவும் கணபதி வழிபாடு இந்தியாவுக்கு வெளியே ஈழம், பர்மா, மலேசியா, இந்தோனேசியா, சீயம், கம்போடியா, வியட்னம், சீனா, மங்கோலியா, யப்பான், மத்திய ஆசியா, ஆபுகானிஸ்தான், திபெத் முதலிய பிற ஆசிய நாடுகள் பலவற்றிற் பரவியுள்ளது. பர்மாவிலே மஹாபியென் எனவும், கம்போடியாவிலே பிராஹ்கெனெஸ் எனவும், சீனாவிலே குவென்ஸியென் எனவும், மங்கோலியாவிலே தொத்கரோன் ககன் எனவும், திபெத்திலே சொஸ்தக் எனவும், யப்பானிலே சோதன்விநாயக்ஷ, குவன்சன்சோ, கங்கிதென் எனவும் பலவாறு அவர் அழைக்கப் பட்டார்.[27]

ஈழத்திலே கணபதி வழிபாடு:

எமது நாட்டிலே வைதிக சமயங்கள், பௌத்தம் ஊடாக இவ் வழிபாடு பரவியது. மிஹிந்தலைக்கு அண்மையிலுள்ள கண்டகசேதிய ஸ்தூபியினைச் சேர்ந்த சிற்பங்

---

26. Heras Fr. H. - மே. கு. ப. 182 - 183

27. Alice Getty. - மே. கு. நூ. ப. xxv

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலே யானைமுகமுள்ள உருவமுண்டு. துதிக்கை இடம்புரியாகவுள்ளது.[28] இது வக்ரதுண்டர் (விநாயகர்) உருவமாயிருக்கலாம். இங்கு அவர் புத்தசமயச் சார்பான தெய்வமாகவே விளங்குகிறார். பிற்பட்ட காலப் பௌத்த நிறுவனங்களிலே சிலைகள் காணப்படுகின்றன.

1938க்கு முன் அநுராதபுரத்திலுள்ள அரசமரத்தின்முன் கணேசர் சிலையொன்று இருந்ததாகவும், பௌத்தர் அவருக்கு வணக்கம் செலுத்தி வந்தனர் எனவும் கூறப்படுகிறது.[29] பசவக்குளத்திற்குச் சமீபத்திலே கணேசர் கோவிலொன்று இருந்தது.[30] வன்னிப்பகுதியிலே விநாயகர் ஆலயங்கள் பல இருந்தன. நுவரவீவா அணைக்கு அண்மையிலே பழைய பிள்ளையார் கோவிலொன்றுள்ளது. அங்கு நேர்த்தியான விநாயகர் சிலை உள்ளது.[31] இதுபோன்ற கோவில்கள் பொலநறுவையில் அமைக்கப்பட்டிருந்தன. இங்கும் திருகோணமலையிலும் சில நேர்த்தியான சிலைகள் கிடைத்துள்ளன. பின்னை இடத்திலே வெண்கலத்தாற் செய்த நிற்கும் நிலையிலுள்ள பிள்ளையார்சிலை குறிப்பிடற்பாலது தேவிநுவரவீவாவில்ராமச்சந்திரன் என்ற வணிகன் விநாயகராலயமொன்றினை கி. பி. 15ஆம் நூற்றாண்டிலே ஸ்தாபித்தான்.[32] இதே காலத்திலே களுத்துறைக்கு வடக்கிலுமொரு கோவில் இருந்தது.[33]

மத்தியகாலத்திய பொலநறுவைச் சிவதேவாலயத்தின் தூணிலே அழகான பிள்ளையார் வடிவமுள்ளது.[34] முருகன் ஸ்தலமான கதிர்காமத்திலே பிள்ளையார் கோவிலொன்றுள்ளது. இடைக்காலத்தைச் சேர்ந்த பிள்ளையார் சிலையொன்று வட இலங்கையின் பழைய துறைமுக நகரொன்றான வல்லிபுரத்திலே கிடைத்துள்ளது. முறிகண்டியிலுள்ள பிள்ளையார் கோவில் பிரசித்தி பெற்றதாகும்.

யாழ்ப்பாண மன்னர் காலத்திலே பிள்ளையார் கோவில்கள் பல இடங்களிலும் இருந்தன. அவற்றுள்ளே நல்லூரிலே இருந்த வெயிலுகந்த பிள்ளையார் கோவில், கைலாயபிள்ளையார் கோவில், மானிப்பாய் மருதடி விநாயகர் கோவில் முதலியன குறிப்பிடற்பாலன. இவை 16 - 17ஆம் நூற்றாண்டுகளிலே பறங்கியரால் அழிக்கப்பட்டன. பிரித்தானியர் காலத்திலே மீண்டும் அமைக்கப்பட்டன. கருணாகரப் பிள்ளையார் கோவில், அரசகேசரிப் பிள்ளையார் கோவில், பருத்தி விநாயகர் கோவில் முதலியன குறிப்பிடற்பாலன. கிழக்கு இலங்கையிலுள்ள மாமாங்கப் பிள்ளையார் கோவில் புகழ் பெற்றது.

ஈழத்தின் பல பாகங்களிலும் குறிப்பாக வடமாகாணம், கீழ்மாகாணம் ஆகியவற்றிலும், கொழும்பு, கதிர்காமம், மலையகம் ஆகியவற்றிலும் பெரிதும் சிறிதுமாகப் பிள்ளையார் கோவில்கள் பல உள்ளன. ஏனைய இந்துசமயக் கோவில்களிலே பரிவார தெய்வக் கோயிலாகவும் காணலாம். அதுமட்டுமன்றிப் பௌத்த கோவில்களிலும் பிள்ளையார் சிலையினைக் காணலாம். ஈழத்தின் சமய கலாச்சார ஒருமைப்பாட்டிற்கும் ஓர்

---

28. Dhavalikar M. K. - 'Ganesa beyond India's Frontiers' Bhavan's Journal xviii 4 Sept. 19. 1971 ப. 59
29. Navaratnam C. S. - A "Short History of Hinduism" in Ceylon - Jaffna 1964. ப. 71
30. ,, மேற்படி.
31. ,, ,,
32. University History of Ceylon Vol. i. Part ii. Colombo ப. 760
33. Navaratnam C. S - மே. கு. நூ. ப. 72
34. Dhavalikar M. K. - மே. கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேக மகிமை

பிரதிஷ்டா பூஷணம், சிவாகம ஞானபானு, சிவஞான பாஸ்கரன்
சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள்

அனுதிமலமுத்த சித்துருவாகிய பரம் பொருள் அனுதிமல பெத்தர்களாகிய ஆன் மாக்கள் போகமோக்ஷமடைய ஆலயத்தில் நிறுவப்படும் திருவுருவத்தில் கருணையுருவா கும்படி பிரார்த்தித்து அபிஷேகம் செய் தலே கும்பாபிஷேகம் ஆகும். இதனைப் பெருஞ்சாந்தி, குடமுழுக்கு என்றும் சொல் வார்கள். உலகெலாமாகி உடனுமாய் வேருய் நிற்கும் பரம்பொருளை, எங்கும் செறிந்த பாலை முலைக்காம்பின் வழியாகப் பெறுவது போலும், எங்கும் வியாபித்த அக்கினியைத் தீக்கடைக்கோல் மூலம் பெறுவதுபோலும், ஆலயத்தில் அமையச் செய்தல் கும்பாபிஷேக மாம்.

இதற்கு மந்திரம், கிரியை, பாவனை என மூன்று வகைகள் கையாளப்படுகின் றன. இனி, மந்திரங்களுக்குச் சக்தி உண் டென்பதை விஷம் நீங்குதல், வருத்தம் மாறு தல் இவைகளாற் காணலாம். பாவனையால் புழு வேட்டுவனுகின்றது. கிரியையால் அசத்து (கெட்டது) சத்(நல்ல)தாகின்றது என்பது குறிப்பு.

ஆகவே கும்பாபிஷேகமும், அனுவர்த் தம் - புதிதாய்ச் செய்வது, ஆவர்த்தனம் - திரும்பச் செய்வது, புனராவர்த்தம் - பழுது திருத்துதல், அந்தரீதம் - பிராயச்சித்தம், என்ற பேதங்களுக்கு ஏற்ற கிரியைகளின் படி நடக்கும். இப்பொழுது நடக்கும் கும்பா பிஷேகத்திற்கு விஞ்ஞக வழிபாடு முதல் மண்டலாபிஷேகம் இறுதியாகப் பல கிரியை கள் உண்டு. அவற்றுட் சிலவற்றை ஆராய் வாம்.

1. விஞ்ஞக வழிபாடு:

நாம் எடுத்த விஷயம் செவ்வனே நிறை வேறும்படி விக்கினங்களுக்குத் தலைவரா கிய விஞ்ஞகனை வழிபடுதலாம்.

எடுத்துக்காட்டாகப் பிள்ளையார் வழிபாடு இலங்குகின்றது.

சைவம், காணபத்யம், கௌமாரம் ஆகியவற்றைக் குறித்து வித்துவான் ச. தண்டபாணிதேசிகர், "சிவகுடும்பம் வாக்கு வடிவமாக ஒருபிள்ளையும், ஆற்றல் வடிவமாக ஒரு பிள்ளையுமாக விரிந்தது" எனக் 'கணபதி' என்ற தமது விரிவான நூலிலே குறிப்பிட்டுள்ளார். திரு. சரஸ்வதி என்பவர், "மூலப்பொருளின் சாரமும், பிரபஞ்சம் முழுவதையும் ஒழுங்குபடுத் தும் பரம்பொருளும் கணபதியே" எனக் குறிப்பிட்டுள்ளார்.35

பிள்ளையார் வணக்கம் பற்றியன யாவற் றையும் தொகுத்து நோக்கும்போது, அவர் இந்து சமயத்தின் உட்பிரிவினைத்திற்கும் பொதுத் தெய்வமாக மட்டுமன்றி இந்தி யாவிலே தோன்றி வளர்ந்த பௌத்தம், சமணத்திலும் இடம்பெற்று இந்தியாவின் பொதுத் தெய்வமாய் விட்டார். ஈழத்தி லும் பௌத்தர், இந்துக்களின் பொதுத் தெய்வமானர். இத்துடன் நின்றுவிடாது மத்திய ஆசியா, கிழக்கு ஆசியா, தென் கிழக்காசியா ஆகியவற்றிலும் இடம் பெற்று, மேற்கு ஆசியா தவிர்ந்த பிற ஆசியப் பகுதிகளில் ஏதோவகையில் இடம் பெற்ற பொதுத் தெய்வமாக மிளிர்கின் றார்.

---

35. Sarasvati - "Greatrers of Ganapate" - Journal of the Indian Society of Oriental Art viii. ப. 41

அடிக்குறிப்பில் வரும் சுருக்கங்கள்:
மே. கு. - மேற்குறிப்பிட்டது. மே. கு. நூ. - மேற்குறிப்பிட்ட நூல். ப. - பக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அனுஞ்ஞை - உத்தரவு பெறுதல்.

குருவடிவான இறைவனையும் குருவையும் பெரியோரையும் வணங்கிச் சிவபுண்ணியமான கிரியையைச் செய்துமுடிக்க உத்தரவு பெறுதலாம்.

3. தனபூசை:

திரவியத்தைச் சிவமாகப் பூசித்து முதலில் மூன்று பாகம் செய்து ஒரு பாகம் ஆலயக்கட்டிடம், மற்றையது நித்திய நைமித்திய பூசை, மூன்றுவது கும்பாபிஷேகச் செலவு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்தலாம். மூன்றுவதைப் பதினொரு பாகம் செய்து செலவு செய்யவேண்டும்.

4. பிரவேசபலி:

இறைவன் பிரவேசம் செய்து இருந்து அருளவேண்டிய இடத்தில் உள்ள கெடுதி செய்யும் தேவதைகளை மவேறு இடங்களாகிய மலை, வனம், கடல், மயானம் முதலிய இடங்களுக்குச் சென்று தங்குங்கள் என்ற பாவனையாம். கிரகசாந்தியும் இக்கருத்துள்ளதேயாம்.

5. வாஸ்துசாந்தி:

பூமிக்கு அதிபதியாகிய பிரமனை வழிபட்டு இந்த இடத்திலுள்ள குற்றங்களை உருவமாக்கிக் கொழுத்திப் பின் அமிர்தமயமாக்கிக் கொள்வதாம்.

6. ஆசார்யவரணம்:

குருவைச் சிவனுக வணங்கி இத் திரவியங்களினுல் இறைவனைப் பூசித்து ஆன்மாக்களைச் சிவானுக்கிரகத்திற்கு ஆளாக்கவேண்டும் என்று கேட்டலாம்.

7. நவக்கிரகயாகம்:

இறைவன் இறைவி முதலியவர்களின் வடிவான சூரிய சந்திராதி கிரகங்களை வணங்கி எமக்கு நன்மையைச் செய்யுங்கள் என்று வணங்குவதாம.

8. அங்குரார்ப்பணம்:

நெல், பயறு முதலிய பல தானியங்களைப் பாலில் ஊறவிட்டு உலகத்தில் கேடிமம உண்டாகவேண்டும் என்று சந்திரனை வணங்கி முளையிடுதலே அங்குரார்ப்பணமாம்.

9. ரக்ஷாபந்தனம்:

உலகசம்பந்தத்தினுல் உண்டான குற்றங்கள் தன்னைப் பாதிக்காமலும், எடுத்த காரியம் இடையூறின்றி முடிப்பேன் என்ற உறுதியுடன் இறைவியின் அருளால் உண்டான நூலை நாகராஜனுகப் பாவித்துத் திருக்காப்பு அணிதலேயாகும்.

10. பூதசுத்தி:

தனது தூல சூக்கும தேகத்தைச் சுத்தி செய்து தன்னுள் சிவனை இருத்தித் தான் சிவரூபமாகி ஏனைய கிரியைகள் செய்வதற்கு யோக்கியம் (தகுதி) உண்டாக்குதலாம்.

11. கும்பஸ்தாபனம்:

பரிசுத்தம் செய்த கும்பம் சர்வதேவதாஸ்ரூபமாம்.

கும்பத்தில் மூர்த்தியை இருக்கச் செய்தல் எப்படியெனில், சடத்துவநியாசத்தால் ஆறு குணங்களை உண்டாக்கிச் சர்வதீர்த்தங்கள் உடைமையால் கும்பத்தில் மூர்த்தியை இருத்தும் முறையாம்.

கும்பத்தின்கீழ் நெல், அரிசி முதலிய தானியங்கள் ஆசனமாகவும், கும்பத்தின் அடியில் பிரமாவையும் நடுவில் விஷ்ணுவையும் நுனியில் உருத்திரனையும் பூசித்து, கும்பவஸ்திரம் தோலாகவும், ஜலம் இரத்தமாகவும், அந்தக்கூர்ச்சம் எலும்பாகவும், சுற்றிய நூல் நரம்பாகவும், கும்பரட்ணம், சுவர்ணபுஷ்பம் சுக்கிலமாகவும், மாதுளம் பழம் பல்லாகவும், மாவிலை ஜடையாகவும், தேங்காய் சிரசாகவும், மந்திரம் ஜீவனுகவும், கூர்ச்சம் முடியாகவும் கற்பித்துக் கும்பத்தில் பிருதிவி முதல் நாததத்துவம்வரை பூசித்து இறைவனை அடையும் வழியாகிய மந்திரம், பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலை ஆகிய ஆறு அத்துவாக்களையும் பூசித்து மூர்த்தியைத் தியானிக்கவேண்டும். இந்த அத்துவாக்களில் வியாபகராயுள்ளவர் பரமேஸ்வரர்.

இந்த ஆறு அத்துவாக்களும் சக்திஸ்வரூபம். பரமேஸ்வரர் சக்திக்கு அதீதர். சக்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் - சிவனுக்கும் பேதமின்மையால் சக்தி அங்கமாகவும் சிவன் அங்கியுமாவார் என்று கூறப்படும்.

அன்றியும் சக்தியிடத்திலிருந்து கலையும், கலையிலிருந்து தத்துவமும், தத்துவத்திலிருந்து புவனமும், புவனத்திலிருந்து வர்ணமும், வர்ணத்திலிருந்து பதமும், பதத்திலிருந்து மந்திரமும் உண்டாயின. இவைகள் ஒன்றிலொன்று அடங்கிப் பிரிந்து இருப்பதினால் கும்பங்களுக்கும் பிம்பங்களுக்கும் ஷடத்துவநியாசம் அவசியம் செய்தல் வேண்டும். கலாநியாசத்தால் சர்வஞ்ஞசித்தியும், தத்வநியாசத்தால் நித்திய திருப்தியும், புவனநியாசத்தால் அனுதிபோதத்துவமும், வர்ணநியாசத்தால் சுவதந்திரமும், பதநியாசத்தால் அலுப்த சக்தியும், மந்திரநியாசத்தால் அனந்த சக்தியும் சித்திக்கும் என்று ஆகமங்களில் கூறப்படுகின்றது.

இவ்வனமாய கும்பத்தை அலங்கரிக்கப்பட்ட யாகசாலையில் வைத்து அக்கினியில் சிவன் முதலான மூர்த்திகளையும் பூசித்து ஓமம் செய்து வேதம் தமிழ்வேத மந்திரங்களால் தோத்தரித்து வணங்கிச் சித்திகளைப் பெறலாம். பின் அந்தந்த மூர்த்திகளுக்கு உள்ள மூலமந்திரம் அமைந்த யந்திரங்களை நவரத்தினம், நவலோகம், நவதாது முதலிய திரவியங்களையிட்டுப் பூசித்து யந்திரத்தை வைக்கவேண்டியது. பின்னர் மூர்த்தியை அழகுபெற இருத்தி அஷ்டபந்தனம் என்னும் மருந்தைச் சாத்தவேண்டியது. உதாரணமாக லோற்றுக்கு பற்றி (அல்லது கறன்ட்) எப்படிப் பிரதானமோ, அதே போல் மூர்த்திக்கு யந்திரம் பிரதானமாம்.

13. எண்ணெய்க்காப்பு :

இதன் பின்னர் அன்பர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துவதால் ஆன்மாவைப் பிடித்துள்ள ஆணவமலம் நீங்கும் என்பது கருத்து.

14. பிம்பசுத்தி :

உருவத்திலுள்ள அசுத்தம் நீங்குவதற்காகப் பஞ்சகவ்வியம், ரத்னஉதகம், மூல உதகம் இவைகளால் வேதமந்திரத்துடன் அபிஷேகம் செய்து, கும்பத்தில் பூசித்தது போல் பிம்பத்திற்குப் பூசித்துக் கும்பத்திலுள்ள மூர்த்திகளை நாபீசந்தான வழியால் பிம்பத்தில் சேர்ப்பித்தலாகிய கிரியையைச் செய்து இறைவனை வழிபட்டு, பின்னர் குறித்த முகூர்த்தவேளையில் தூலலிங்கமாகிய விமானத்திற்கும் சூக்கும லிங்கமாகிய மூலமூர்த்திக்கும் ஏனையபரிவார மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் செய்யவும்.

பின்னர் மூர்த்தியில் அருள் பெருகுவதற்காக நாற்பது நாட்களுக்கு மண்டலாபிஷேகம் செய்து இறைவன் திருவருளைப் பெற்றுச் சிவபுண்ணியத்தை அடைவோமாக.

RAMANI TEXTILES – ரமணி ரெக்ஸ்ரைல்ஸ்

Dealers in :
ALL KINDS OF
TEXTILES

No. 166, K. K. S. ROAD
JAFFNA

எல்லாவித
துணி வகைகளும்
பெற்றுக்கொள்ளலாம்.

166, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்பொழியும் ஆனைமுகன்

(நான்மணிமாலை)

வெண்பா

மோனத் திருந்து முழுது முணர்ந்துவிடும்
ஞானப் பழம்பொருளே! நல்லிறையே!—நற்றமிழில்
தேனினிய கவிஉளத்தில் தேங்கிடுநற் பொருளுடனே
நானுரைப்பன் நின்னருளே துணை!

கலித்துறை

துணையே நினதடி, தொடரும் பிறப்புழல் வாழ்வினில்நற்
துணையே, தூமலர் கொண்டு தொழும்மெய் யடியவர்க்கு
இணையே துன்னருள்? இன்னல்கள் யாவும் எரிந்துவிடும்
மணியே! எமக்கிந்த மண்ணினில் வாழ்வு மலர்ந்திடுமே!

விருத்தம்

மலரும் வாழ்வு விநாயகனே மனதில் கொண்டால், மண்மீதில்
கலையும் திருவும் கைகூடும், கணேசன் காப்பான், பேரமைதி
நிலவும் மனதில், எந்நாளும் நெஞ்சம் கலங்கா தெழிலோங்கும்,
நலமும் திகழும், நல்லுடலும் நமக்கே அருள்வான் கணபதியே!

அகவல்

கணபதி பெயரைக் கருத்தினிற் கொண்டால்
குணம்பல உண்டாம், குவலயந் தன்னில்
ஞானமும் வீடும் நண்ணிடும், வாழ்வில்
நானெனும் எண்ணம் நலிந்திடும், வாக்கு
மனமொடு மெய்யை மாற்றியெம் வழியில்
தினமுமே வாழும் திறம்எளி தாகும்,
மனமொடு வாக்குக் காயமும் கடந்த
கணபதி ஞானம் வீட்டிற்குக் கடவுள்,
ஞானமாய் ஒளியாய் நலம்தரும் இறையாய்
ஆனவன் கணேசன், அவனடி போற்றுவோம்!
ஓசையாய் ஒலியாய் ஓவற நிறைந்து
காசினி விளக்கும் கதிரவன், நாத
விந்துவாய் விளங்கும் வித்தகன், ஓமெனும்
மந்திரத் துட்பொருள், மறைவடி வானவன்,
பிரணவப் பொருளே! பிஞ்ஞகா! வாழ்வில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமிடர் கூளந்துநம் செயலினில் வென்றிடச்
செய்திடும் தெய்வமே! சிறியவர்க் கிடரினைச்
செய்துநல் லறிவினைச் சேர்த்திடும் விக்கின
ஈஸ்வரா! இமையவன் புதல்வனே!
மாசிலா மணியே! மனமொளிர் சுடரே!

வெண்பா

சுடர்விடும் ஆண்மை, சொல்வது பலிக்கும்,
இடர்பொடி யாகும், இருளகலும் — இதயத்து
விடமுண்ட கண்டன் முதல்மைந்தன் பார்வை
தொடர்ந்தென்றும் வீழ்ந்திடும் போது.

கலித்துறை

போதுமலர் கொண்டு போற்றிடின் வாழ்வு பொலிந்துவிடும்,
ஏதும் இழந்திடி னும்இனி தான எழில்மலரும்,
பாதி மதியணி வேணியன் தந்தநல் ஆனைமுகன்
யாதும் அவன்தரு வான்,இனி ஏனிங்கு சஞ்சலமே!

விருத்தம்

சஞ்சலத்தை விடுமனமே, சலிப்படையா திருப்பாய்,
சலனமற்ற அமைதிநிலை சாரும்,உயிர் வாழும்,
வஞ்சனைபொய் வளர்குறைகள் வாழ்வினைவிட் டோடும்
வழிபிறக்கும், வேழமுகன் வண்பதங்கள் தொழுவாய்!
நஞ்சுண்ட கண்டனுமை தந்தமகன் நாளும்
நமைக்காப்பான், நாளுமினிச் சோர்வடையா திருப்பாய்!
அஞ்சுவது மில்லை,இனி அழுவதுமிங் கில்லை,
ஆனைமுகன் அடிதொழுவாய்! அமரநிலை கூடும்!

அகவல்

கூடுழல் வாழ்வினில் வாடுதல் விடுத்து
நாடுக நல்லருள், நற்பணி புரிக!
வேழ முகமும் விரிந்த செவிகளும்
பேழை வயிறும் பெருகிய கருணையின்
மதம்பொழி குஞ்சரம் மனதினில் நிற்க!
நிதம்திரு வடிவினில் நிறைந்திரு தத்துவம்
தானறிந் திடின்உளத் தறிவுமிக் கோங்கும்!
வினைகளின் பயன்தரு மிடர்களும் நீங்கும்,
ஓமெனும் ஒலிநிறைத் தோங்கிடும் எங்கும்,
ஓமெனும் பிரணவத் துயர்மறை தன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனையின் துதிக்கையும் அகல்செவி தலையும்
வானவன் பிரணவன் கொண்டுணர்த் திடுவான்,
எல்லையற் றெங்குமாய் விரிந்திடு மியற்கையின்
வல்லமை விளங்கிடும் வலியபேர் உடல்,சிவ
சக்தியின் மகன்பெரும் சக்தியைக் கொண்டவன், 15
சக்தியின் புறம்எழில் இயற்கையாய் விரிந்தது,
அண்டங்கள் யாவையும் அடக்கிய வயிறு,எந்தப்
பண்டமும் வேறில்லைப் பகர்ந்திடின், பிரணவப்
பொருளினில் பிறிதுவே றெந்தப்
பொருளுமிங் கில்லையாம், போற்றுக மனமே! 20

*

வெண்பா

மனம்பல வழியில் மயங்கிடும், ஆசை
வனத்தினில் அலைந்திடும், வாழ்வும் — புவியினில்
கன(வு)அது கலையுமுன் கணபதி கழலினைத்
தினம்பணி, மனம்அருள் நிறையும்.

கலித்துறை

நிறையிருள் நீங்கும், நீணிலம் ஒளிரும், நித்தமும்நாம்
சிறையுறும் வாழ்வு சீர்பெறும், தளைகள் சிதறிவிடும்,
முறையினில் வந்து முற்றுறும் செயலும், நமைக்காப்பான்
மறைபுகல் வேழ முகன்,எழும் ஞான இளம்பிறையே!

விருத்தம்

பிறை நிலாவணி முதல்வன், நற்றமிழ்
மறை புகன்றிடு வித்தகன்,
குறையி லாவுளம் குடிகொள் சங்கரன்,
குன்று தித்தநற் கோதிலா
நறைம லர்க்கருங் குழல்உ மையுடன்
நடன மாடிடும் நாயகன்,
கறை மிடற்றினன் மகன்இ ணைகழல்
தொழு மனக்குறை யகலுமே!

அகவல்

அகலும் இருவினைப் பயன்கள், சக்தியைப்
பகரும் பாம்பினைத் தொந்தியில் கச்சையாய்
சுற்றியண் டங்கள் யாவையும் தாங்கினன்,
முற்றிலும் அவன் சக்தியின் மூச்சிலே
அமைதி யாய்ஒழுங் காகஅ மைந்திடும், 5

250262

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையின் மைந்தன் உளப்படி சென்றிடும்,
ஐங்கரன் கைகளில் அட்சர மாலையும்
அங்குச பாசமும் தந்தமும் கொண்டனன்,
அகமனம் குவிந்து ஐம்புலன் ஒடுங்கி
இகபரம் மறந்து இறைவனே எண்ணி
மந்திரம் செபித்தல்கை மாலை உணர்த்திடும்,
நந்தி மகன்கரத் தங்குசம் உயிர்களை
நல்வழி நடத்திடும், நலமிலாத் தீயரை
அல்லலில் பிணைத்தவர்க் கறிவினை யூட்டிடப்
பாசமோர் கையினிற் பற்றினன் விக்கின
ராசன், மெய் ஞானமும் கல்வியும் பெற்றிடல்
மன்பதைக் கவசியம், மக்களின் விழிகள்
என்பது எண்ணெழு எழுத்(து) எழில் எயிற்றினை
முறித்ததை யுணர்த்திய முதல்வனே!
அறிவினுக் கதிபனே! ஐங்கரா போற்றி!

❋

வெண்பா

போற்றுக உடலைப் பொழுதெலாம் கடமை
ஆற்றுக, அயர்வை அகற்றிடுக,—ஆனைமுகன்
ஆற்றல் புகழ்செல்வம் ஆயுள்தமை அளித்து
ஏற்றமுடன் வாழ்விப்பான் இனிது.

கலித்துறை

இனிதே பிறவி, இன்கனிக் கிகபரம் குமரன்சுற்ற,
கனி, ஈசன் அம்மை வலம்வந்து பெற்ற களிற்றுமுகன்
கனிமோ தகம்அவல் பசுபோ தத்தின் கவளமுண்டு
இனிதா மிணைவளித் தெழிலா முடலினை எமக்களிப்பான்!

விருத்தம்

அளிப்பான் அறிவும் பொருளுமெமக்
கருள்வான் அன்பும் பண்பும், நீ
களிப்பாய் மனமே! கருதியவை
கணமும் எமக்குக் கைகூடும்
விழிப்பாய் இரு! வீண் கதைபேசி
வீழும் வாழ்வை விட்டுவிடு,
செழிப்பாய் வாழ்! நம் சொற்படியே
சித்தம் நிலைக்கும் ஓரிடத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவல்

ஓரிடத் திருந்து, ஓடியும் ஆடியும்
ஓய்விலா தலையும் உலகத் தவரின்
பாரினில் நடக்கும் பலவித செயல்களும்
பார்த்து மகிழும் பார்வதி மகனே!
ஞானக் கொழுந்தே! யானை முகனே!
ஞாலத் தெனது வாழ்வினில் நல்லொளி
காணச் சிறிது அருள்செய் ஐயா!
காலம் முழுதுமுன் காலடிப் பூசை
கான மிசைத்துநற் றமிழினிற் செய்வேன்,
கற்பக விநாயகா! கருணையின் கடலே!
எப்பிறப் பெடுப்பினும் எப்புவி கிடைக்கினும்
என்றும் உனது இன்னொளி என்னுளம்
வீழ்ந்திடல் வேண்டும், வேறெதும் வேண்டேன்,
வித்தைக் கதிபனே! வீழுமுன் அருளினால்
நல்லவை சொல்வேன், நல்லவை செய்வேன்,
நன்மையில் மலர்ந்து தீமையில் நலிந்து
போதல்இங் கில்லை; பொறிகளை யாண்டு
பொழுதெலாம் உந்தன் பொன்னடி போற்றுவேன்!
எழில்வளர் ஞாலத் திரவியின்
இன்னொளி பழிக்கும் இறைகழல் வாழ்க!

— க. கணேசலிங்கம்

நன்றி

எத்தனையோ இடர்களுக்கிடையில் இம் மலர் வெளிவருகிறது. இதற்கு உதவிய விளம்பரதாரர்களுக்கும், எழுத்தாள அன்பர்களுக்கும், அழகாக அச்சிட்டு உதவிய சுகன் அச்சகத்தினருக்கும், இன்னும் பலவகைகளில் உதவிய அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி.

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட - இலங்கை மக்களின் நல்வாழ்வுக்கு
கற்பக விநாயகனைப் பிரார்த்திக்கிறேம்.

அன்பளிப்பு

NORTHERN INDUSTRIES நொர்தேன் இன்டஸ்ட்ரீஸ்

TYRE RETROADERS AND
MANUFACTURERS OF
RUBBER GOODS

டயர் திரப்புபவர்கள்

112, STANLEY ROAD
JAFFNA

112, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

Telephone: 7158

Telegrams: "NORTHIND"

Office: 75, Arasady Road, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ask For

★ VINK BALL POINT REFILLS

★ VINK BALL POINT PENS

★ VINK FOUNTAIN PEN INKS

★ VINK STAMP PAD INKS

★ NEW ERA FILES.

Manufacturers :

VELLIAMPATI

ALAVEDDY

Sole Distributors :

Cargills (Ceylon) Ltd.,

COLOMBO.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For

★ PILGRIMAGES

★ PICNICS

★ HOLIDAY TRAVELS

With Comfort and Reliability

Lanka Tours and Travel Agents Ltd.

THOLPURAM :: CHULIPURAM

With the Best Compliments

of

LINGAM STORES
57, Main Street
JAFFNA

SOTHY TEXTILES
14, Modern Market
Power House Road,
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Space Donated

by

Murugan Electrical Stores

ELECTRICAL CONTRACTORS & MERCHANTS

6/8, STANLEY ROAD
JAFFNA

Telephone: **7110**

Telegrams: **"CURRENT"**

நியூரோன் எலெக்றிக்கல்ஸ்

வடமாகாண பிரதான விநியோகஸ்தர்கள்

* எஸ்'லோன் தண்ணீர்ப் பைப்புகள்
* குளியலறை மாபிள் சாதனங்கள்
(Ceremics)

141, 143, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

தொலைபேசி: **7016**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Spare Parts
and Accesories
for
MOTOR CYCLES
and
WATER PUMPS

Visit:

AUTO SUPPLIERS
42, Clock Tower Road
JAFFNA

வட இலங்கையில்
புடைவை வியாபாரத்தில்
முன்னேடியாக இருப்பவர்கள்
கணேசன் ஸ்ரோர்ஸ்
ஸ்தாபனத்தார்
ஒருமுறை விஜயம் செய்தால்
உண்மை அறிவீர்கள்

கணேசன் ஸ்ரோர்ஸ்
63, 78, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்

உங்களுக்குத் தேவையான
S. R. மாப்பியன் மற்றும் அரிசி
வகைகள்,
பலசரக்கு, சாய்ப்புச் சாமான்கள்,
இனிப்பு, கயிறு வகைகளும்,
எங்கள் தயாரிப்பான
கிருஷ்ணு அசல் அப்பளமும்
எங்களிடம்
பெற்றுக்கொள்ளலாம்.

குணரத்தினம் ஸ்ரோர்ஸ்
96, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 556

சிறந்த
புகைப்படங்களுக்கு

சித்ராலயா
படப்பிடிப்பாளர்
18, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 522

UNIVERSITY OF JAFFNA LIBRARY

250262

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Jaffna
250262
Library

Digitized by Nobraham Foundation
nobraham.org | aavanaham.org

University of Jaffna
250262
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Needham Foundation